REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2022 ஏப்ரல் 30 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN තිනකරන්

1932 - 2022

## பொதுஜன முற்போக்கு ஊழியர் சங்க மேதினக்கூட்டம்



பொதுஜன முற்போக்கு ஊழியர் சங்கத்தின் மேதினக் கூட்டம் நாளை பொதுஜன முற்போக்கு ஊழியர் சங்கத்தின் நுகேகொட ஆனந்த சமரகோன் மேடையில் நடைபெறவுள்ளது. "சவால்களுக்கு மத்தியில் பலத்து உரக்கும் குரல்" என்ற தொனியில் இந்தக்கூட்டம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வரு. 90 இல. 100

Saturday 30, April, 2022

12பக்கங்கள்

## அருகிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்ற சந்தர்ப்பம்

### ஆசிரியர்களது கோரிக்கைக்கு கல்வியமைச்சு இணக்கம்

எரிபொருள் செலவுகள் மற்றும் தற்போதையநிலைமைக்குமத்தியில், அருகிலுள்ள பாடசாலையில் கடமையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு, ஆசிரியர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைக்கு, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இணக்கம் தெரிவித்துள்ளார்.

අධ්‍යාපන අමාත්‍යාංශය கல்வி அமைச்சு MINISTRY OF EDUCATION

எனினும், இவ்வாறானதொரு தீர்மானத்தை உடனடியாக அமுலாக்க முடியாதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

06

## மின் கட்டணத் திருத்தம் தொடர்பில் பொது மக்களிடமிருந்தும் கருத்து

### பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவிப்பு



அரசாங்கத்தின் கொள்கையைப் பெற்றவுடன் மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான பொதுமக்களிடம் கருத்துக் கோரலை நடத்தவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையினால் முன்மொழியப்பட்டுள்ள கட்டண அதிகரிப்புக்கான திருத்தம் தொடர்பில்

06

## IMF வேலைத்திட்டம் தொடர்பில் இரு மாதங்களில் ஆரம்பகட்ட ஏற்பாடு

### மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க நம்பிக்கை



சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் தொடர்பில் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் பணியாளர் மட்ட அல்லது ஆரம்பகட்ட உடன்படிக்கையை எட்ட முடியுமென மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை வர்த்தக சம்மேளன குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், இதற்கமைவான பொருளாதார கட்டமைப்பை நிறுவும் பணிகளில் முன்னேற்றம்

06

## நாட்டுக்கு பொறுப்புக் கூறும் வகையில் அமையும்

# இடைக்கால அரசை அமைக்க ஜனாதிபதி கோட்டா இணக்கம்

### ஜனாதிபதியை சந்தித்த SLFP தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டுக்கு வந்தால் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று தெரிவித்தார்.

அத்துடன் எவரது அரசாங்கம்? யார் தலைவர்? என்று

06

### எவரது அரசாங்கம், யார் தலைவரென்று பாராது மக்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பது அவசியம்



## எரிவாயு நெருக்கடி மே மாதத்துக்குள் முடிவுக்கு

### அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு



தற்போதைய எரிவாயு தட்டுப்பாடு அடுத்த மாத இறுதிக்குள் சரி செய்யப்படுமென வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. இந்திய கடன் திட்டத்தின் கீழ் லிற்றோ மற்றும் லாஃப்ஸ் (Laughs) நிறுவனங்களுக்குத் தேவையான நிதி வசதிகள் வழங்கப்படுமென அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். இந்திய அரசாங்கத்தின்

06

## ஆர்ப்பாட்டங்களின் போது வன்முறை குறித்து கவலை

### அமைதி முறைக்கு பிரிட்டன் வலியுறுத்து



இலங்கையில் நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்களின் போது இடம்பெறும் வன்முறைகள் குறித்து பிரிட்டன் கவலை வெளியிட்டுள்ளது.

ஆர்ப்பாட்டங்களின் போது இடம்பெறும் வன்முறைகள் குறித்து கவலையடைவதாக தெரிவித்துள்ள பிரிட்டன் அரசாங்கம், இலங்கையின் அரசியல் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வைக் காண்பதற்காக அனைத்து தரப்பினரையும் ஜனநாயகத்தை

06



இந்தோனேஷியா இலங்கைக்கு நன்கொடையாக வழங்கிய 1.6 மில்.அமெ.டொலர் பெறுமதியான மருந்துகள் நாட்டை வந்தடைந்தன. அவற்றை இலங்கைக்கான இந்தோனேசிய தூதுவர் டெவி டோபிங், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவிடம் கைளித்தார்.

### மே 02 ஆம் திகதி

## பொது விடுமுறை தினமாக அறிவிப்பு

மே தினத்தையடுத்து நாளை மறுதினம் மே 2 ஆம் திகதி பொது விடுமுறை தினமாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி இதனை அறிவித்துள்ளார். மே 01 ஆம் திகதி சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு இந்த

06

### மோசடி குற்றச்சாட்டிலிருந்து

## முன்னாள் அமைச்சர் பௌஸி விடுவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசிக்கு எதிராக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல்

06

### பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும்வரை

## நகரங்களுக்கும் அத்தியாவசிய தேவைகளுக்குமே எரிவாயு




நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும் வரை நகரங்களுக்கும் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே சமையல் எரிவாயு

06

## நியூஸிலாந்திலிருந்து பால் மற்றும் இறைச்சி

### சலுகைக் கடன் திட்டத்தில் ஏற்பாடு



இலங்கைக்கு பால் மற்றும் விலங்குணவுப் பொருட்களுக்கான சலுகைக் கடன் திட்டத்தை வழங்குவதற்கு நியூசிலாந்திலிருந்து

06

## 2021ம் ஆண்டுக்குரிய O/L பரீட்சைக்கான திகதிகள் அறிவிப்பு

2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சையை மே மாதம் 23ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சும், பரீட்சைகள் திணைக்களமும் திட்டமிட்டுள்ளன.

இதுதொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் (28) நடைபெற்ற

06

## மே தினத்தன்று காலி முகத்திடல் போராட்ட களத்துக்குள் வர வேண்டாமென அறிவிப்பு

### அரசியல் கட்சிகளுக்கு இளையோர் செய்தி



தொழிலாளர் தினமான நாளை 01 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலிமுகத்திடல் போராட்டக்களத்துக்கு அரசியல்வாதிகளை அழைத்துக்கொண்டு வர வேண்டாமென போராட்டத்திலுள்ள இளைஞர், யுவதிகள் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அறிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க,

06

### இலங்கைக்கு உதவ தனித்தீர்மானம்:

## தமிழக சட்ட சபையில் மு.க. ஸ்டாலின் தாக்கல்!



பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் இலங்கைக்கு அத்தியாவசிய பொருட்கள், உயிர்காக்கும் மருந்துகள் வழங்க மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என தமிழக சட்டசபையில் நேற்று (29) தனித்தீர்மானத்தை தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் தாக்கல் செய்தார்.

இலங்கையில் தற்போது நிலவிவரும் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவும் பொருட்டு தமிழ்நாடு அரசு அவர்களுக்கு தேவையான அரிசி, பருப்பு முதலிய அத்தியாவசியப் பொருட்கள் மற்றும்

06




## தனமல்வில வார சந்தையில் ஒருவர் வெட்டிக் கொலை!



தனமல்வில வாராந்த சந்தை வளாகத்தில் நபரொருவர் கூரிய ஆயுதத்தினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாரச்சந்தைக்கு பொருட்களை கொள்வனவு செய்ய வந்த நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். கூரிய ஆயுதத்தினால்

06

### பிரதமருடன் மனோ MP தொலைபேசி உரையாடல்:

## பொருளாதார பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்குவோம்

### அதன்பின் ஆர்ப்பாட்டங்கள் ஓய்ந்துவிடும் என பிரதமர் தெரிவித்தார்



"நாட்டில் இன்று நிலவுவது பொருளாதார பிரச்சினையே. எமக்கு நட்பு நாடுகள் உதவும். பிரச்சினைகளுக்கு நாம் பொருளாதார தீர்வு வழங்குவோம். மக்களின் பொருளாதார பிரச்சினைகள் தீர்ந்து விட்டால், இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் ஓய்ந்து போய் விடுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தன்னிடம் தெரிவித்ததாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினமிரவு பிரதமருக்கும்

06

## அலரிமாளிகைக்கு அருகில் அமைதியின்மையால் குழப்பம்

### காயமடைந்த ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி



கொள்ளுப்பிட்டியில் அலரி மாளிகைக்கு முன்பாக நடத்தப்படும் போராட்டத்தில் நேற்று இடம்பெற்ற அமைதியின்மை, குழப்பம் காரணமாக ஒருவர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகைக்கு முன்பாக தொடர்ச்சியாக போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. பல்கலைக்கழக மாணவர்கள்,

06



# சர்வதேச செய்திகள்

## ஐ.நா தலைவர் இருக்கும் நிலையில் உக்ரைனிய தலைநகரில் தாக்குதல்

### தோல்வியை ஒப்புக்கொண்டார் குட்டரஸ்

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அன்டொனி குட்டரஸ் உக்ரைன் தலைநகர் கியேவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் நேரத்தில் அங்கு ரொக்கெட் தாக்குதல் இடம்பெற்றுள்ளதை அடுத்து அவர் தனது அமைப்பைச் சேர்ந்த பாதுகாப்புச் சபையை கண்டித்துள்ளார்.

பாதுகாப்புச் சபை உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர தவறியுள்ளது என்று குட்டரஸ் தெரிவித்துள்ளார். இது ஏமாற்றம், கோபம் மற்றும் வேதனைக்குக் காரணமாகியுள்ளது என்றும் அவர் கூறினார்.

'இந்தப் போரைத் தடுப்பது மற்றும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அதன் அனைத்து அதிகாரத்தையும் பயன்படுத்துவதில் தோல்வி கண்டுள்ளது என்பதை நான் தெளிவாகக் கூறிக்கொள்கிறேன்' என்றார் அவர்.

15 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட ஐ.நா பாதுகாப்புச் சபை சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பாக உள்ளது.

ஆனால் கடந்த பெப்வரியில் இருந்து இடம்பெற்றுவரும் போரை தடுப்பதற்கு தவறியது குறித்து உக்ரைனிய அரசு உட்பட பாதுகாப்புச் சபை கடும் விமர்சனத்தை எதிர்கொண்டு வருகிறது.

ரஷ்யா பாதுகாப்புச் சபையின் நிரந்தரக அங்கத்துவத்தை பெற்றிருப்பதோடு அது இந்த போர் தொடர்பில் ஒன்றுக்கு மேற்பட்ட முறை தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இந்நிலையில் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கியுடன் இணைந்து கடந்த வியாழக்கிழமை நடத்திய கூட்டு செய்தியாளர் சந்திப்பில் குட்டரஸ் பேசினார். எனினும் இந்த சந்திப்புக்கு முன்னதாகவே பாதுகாப்பு சபையை விமர்சித்தார்.

'உக்ரைன் ஜனாதிபதி மற்றும் மக்களை நாம் கைவிடமாட்டோம் என்பதை கூறவே நான் இங்கு வந்துள்ளேன்' என்று அவர் குறிப்பிட்டார்.

இதன்போது ஐக்கிய நாடுகள் சபையை பாதுகாத்து பேசிய குட்டரஸ், பாதுகாப்புச் சபை முடங்கிய போதும் ஐ.நா வேறு நடவடிக்கைகளை எடுக்கும் என்று தெரிவித்தார்.

'ஐ.நாவின் 1,400 உறுப்பினர்கள் உக்ரைனில் உள்ளனர். அவர்கள் உதவிகள், உணவுகள், பணம் மற்றும் ஏனைய உதவிகளை வழங்கி வருகின்றனர்' என்றார்.

ஐ.நா தலைவரின் வருகையின் போது கியேவின் மத்திய செவ்சன்கோ மாவட்டத்தில் மூன்று வெடிப்புகள் இடம்பெற்றன. இதில் மூவர் காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக நரக மேயர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையை அவமானப்படுத்த இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாய் உக்ரைனிய ஜனாதிபதி செலென்ஸ்கி கூறினார்.

ரஷ்யா போர் குற்றத்தில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்படும் பல இடங்களையும் குட்டரஸ் பார்வையிட்டார். எனினும் உக்ரைனின் இந்தக் குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்து வருகிறது.

அங்கு புச்சா நகரில் ரஷ்ய படைகள் ஏராளமானோரை கொன்று புதைத்துள்ள புதைகுழிகளை பார்வையிட்டு வேதனை தெரிவித்த அவர், இது தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணை நடத்துவதற்கு தனது ஆதரவை தெரிவித்ததுடன், ரஷ்யா இதற்கு ஒத்துழைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

உக்ரைன் மற்றும் ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டுவரும் அமைதி முயற்சியாகவே குட்டரஸ் பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். முன்னதாக அவர் ரஷ்யா சென்று அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் பேச்சுவார்த்தை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது உக்ரைனின் தெற்குத் துறைமுக நகரான மரியுபோலின் நிலைமை குறித்து குட்டரஸும் உக்ரைனிய ஜனாதிபதி செலென்ஸ்கியும் பேசியுள்ளனர்.

போர் ஆரம்பித்ததில் இருந்து கடுமையாகத் தாக்கப்படும் மரியுபோலில் உள்ள உருக்கு ஆலையில் ஆயிரக்கணக்கான படை வீரர்களும் பொதுமக்களும் சிக்கியுள்ளனர். அவர்களை அங்கிருந்து மீட்க ஐக்கிய நாடுகள் சபை உதவ வேண்டும் என்று செலென்ஸ்கி கோரிக்கை விடுத்துள்ளார். குட்டரஸ் அது குறித்து இவ்வார ஆரம்பத்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் பேசினார்.

உருக்கு ஆலையில் இருப்பவர்களை மீட்க ஐ.நாவுக்கும் செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் புட்டின் கொள்கையளவில் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

ரஷ்யப் படையினர் அந்த ஆலையைத் தொடர்ந்து தாக்குவதால் உக்ரைனிய உள்ளூர்த் தளபதி ஒருவர் உதவிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். அந்த ஆலைக்குள் வீரர்கள், பொது மக்களோடு காயமுற்ற சுமார் அறுநூறு பேரும் இருப்பதாக அந்தத் தளபதி கூறுகிறார்.

## வீதிகளின் ரஷ்ய பெயர்களை மாற்ற உக்ரைன் நடவடிக்கை



உக்ரைனின் சில நகரங்கள் அவற்றின் வீதிகளின் பெயர்களை மாற்றத் திட்டமிட்டுள்ளன.

ரஷ்யாவுடன் தொடர்புடைய பெயர்களைக் கொண்ட வீதிகளுக்கு அந்நடவடிக்கை எடுக்கப்படும். அதையொட்டி 467 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தலைநகர் கியேவ் நகர சபை கூறியது.

ரஷ்ய எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோரின் பெயர் சூட்டப்பட்ட வீதிகளின் பெயர்களும் மாற்றப்படுமெனக் கூறப்பட்டது.

ரஷ்யாவுடனான போர் முடிவடைந்தவுடன் வீதிகளின் பெயர்களை மாற்றும் திட்டத்தைச் செயல்படுத்தவிருப்பதாகக் கார்கிவ் நகர மேயர் கூறியுள்ளார்.

உக்ரைனின் வடக்குப் பகுதியில் உள்ள சில நகரங்கள், அவற்றைத் தற்காத்த இராணுவத் துருப்பினரின் தொடர்பில் புதிய பெயர்களைச் சூட்டியுள்ளன.

ரஷ்யாவுடன் தொடர்புடைய அனைத்து அம்சங்களும் முற்றிலும் நீக்கப்படுமென உக்ரைனின் கலாசார அமைச்சர் ஒலெக்சாண்டர் தச்சென்கோ கடந்த வாரம் எச்சரித்திருந்தார்.

## தென்கொரியாவில் முகக்கவசம் அணியும் கட்டுப்பாட்டில் தளர்வு



தென்கொரியா அடுத்த வாரத்திலிருந்து வெளிப்புறங்களில் முகக்கவசம் அணியும் விதிமுறையைத் தளர்த்தவிருப்பதாக அந்நாட்டுப் பிரதமர் கிம் பூகியாம் நேற்று ஏப்ரல் 29 ஆம் திகதி அறிவித்துள்ளார்.

கொவிட்–19 கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதில் தென் கொரியா எடுத்துள்ள அண்மை முடிவு இதுவாகும். நோய் பரவல் தொடர்பான பெரும்பாலான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தளர்த்திய இருவாரங்களுக்குப் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

உணவகங்களும் வர்த்தகங்களும் இரவு 12 மணிவரை செயல்படலாம் என்று ஏப்ரல் 18ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. ஆனால் 50 பேருக்கும் அதிகமானோர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளில் மக்கள் தொடர்ந்து முகக்கவசம் அணிய வேண்டும்.

தென் கொரியாவில் தினசரி வைரஸ் தொற்றுச் சம்பவங்களின் எண்ணிக்கை 100,000க்குக்கீழ் பதிவாகிறது. மார்ச் நடுப்பகுதியில் அந்த எண்ணிக்கை 620,000 ஆக இருந்தது.

தென் கொரியாவின் 52 மில்லியன் மக்கள் தொகையில் சுமார் 87 வீதத்தினர் முழுமையாகத் தடுப்பூசிப் போட்டுக்கொண்டுள்ளனர். 65 வீதத்தினர் கூடுதல் தடுப்பூசியும் போட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கொவிட்–19: கட்டுப்பாட்டை மேலும் இருக்குகிறது சீனா



சீனாவின் குவாங்சோ நகரில் அனைத்து உள்நாட்டு விமானச் சேவைகளும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள விமான நிலைய ஊழியர்களுக்கும் அவர்களுடன் நெருங்கிய தொடர்பில் உள்ளவர்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

ஷங்ஹாயில் நடப்பிலுள்ள முடக்கநிலையைத் தவிர்க்க குவாங்சோவில் உள்ள 7 வட்டாரங்களில் பெரிய அளவிலான வைரஸ் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பீஜிங்கில் உள்ள பாடசாலைகளும் அலுவலகங்களும் மூடப்பட்டுள்ளன. அங்குள்ள குடியிருப்புப் பேட்டைகளில் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பீஜிங்கில் 50க்கும் மேற்பட்ட வைரஸ் தொற்றுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. 21 மில்லியன் பேருக்கும் அதிகமானோர் வசிக்கும் பீஜிங்கில் இன்று 30 ஏப்ரல் மூன்றாவது முறையாக வைரஸ் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முழுமையான கொரோனா தொற்றை துடைத்தொழிக்கும் கொள்கையை பின்பற்றும் சீனா, நோயை கட்டுப்படுத்த கடுமையான முடக்கநிலை, கூட்டு வைரஸ் சோதனை மற்றும் பயணக் கட்டப்பாடுகளை செயற்படுத்தி வருகிறது.

## தாய்வானில் கொவிட் தொற்று அதிகரிப்பால் பெரும் நெருக்கடி



தாய்வானில் அதிகரிக்கும் கொரோனா தொற்றுச் சம்பவங்கள் அந்நாட்டுச் சுகாதாரப் பராமரிப்புக் கட்டமைப்பின் மீது நெருக்குதலை ஏற்படுத்தும் என்று அஞ்சப்படுகிறது.

அந்நாட்டில் கொவிட் 19 பரிசோதனைக் கருவிகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் அவற்றை விநியோகிக்க வேண்டிய கட்டாயத்தில் தாய்வானிய அரசாங்கம் உள்ளது.

தாய்வானில் தினசரி வைரஸ் தொற்றுச் சம்பவங்களின் எண்ணிக்கை முதல்முறையாக 10,000ஐத் தாண்டியுள்ளது. அந்த எண்ணிக்கை மேலும் உயரும் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை பரிசோதனைக் கருவிகளை விநியோகிக்க ஆரம்பித்தது தாய்வான். மருந்தகங்களுக்கு வெளியே நீண்ட வரிசைகள் காணப்பட்டன. ஒரு நபர் ஐந்து பரிசோதனைக் கருவிகளைக் கொண்ட பெட்டியை 17 டொலருக்கு வாங்கலாம். விற்பனைக்கு வைக்கப்பட்ட 50 மில்லியனுக்கும் அதிகமான பரிசோதனைக் கருவிகளை மக்கள் வேகவேகமாக வாங்குகின்றனர். இவ்வார ஆரம்பத்தில் தாய்வான் வீட்டிலேயே தனிமைப்படுத்திக்கொள்ளும் நாட்களின் எண்ணிக்கையை 10இல் இருந்து 3 ஆகக் குறைத்துள்ளது. கடந்த புதன்கிழமை தொடர்புத் தடமறியும் நடைமுறையும் நிறுத்தப்பட்டுள்ளது.

வரும் வாரங்களில் வைரஸ் தொற்று உச்சத்தை எட்டும் என்று அந்நாட்டுச் சுகாதார அமைச்சர் கூறியுள்ளார்.

தினசரி வைரஸ் தொற்றுச் சம்பவங்களின் எண்ணிக்கை 100,000ஐத் தாண்டும் என்று அவர் மதிப்பிட்டுள்ளார். இருப்பினும் ஜூலை மாதம் முதல் நாட்டின் எல்லைகளை மீண்டும் திறக்க அவர் திட்டமிட்டுள்ளார்.

## கொகா கோலாவை வாங்குவதாக வேடிக்கையாகக் கூறியுள்ள மஸ்க்






உலகின் பெரும் செல்வந்தர் எலோன் மஸ்க் அடுத்து கொகா கோலா நிறுவனத்தை விலைக்கு வாங்கவிருப்பதாய் வேடிக்கையாகக் கூறியுள்ளார்.

அண்மையில் அவர், ட்விட்டர் சமூக ஊடகத்தை 44 பில்லியன் டொலருக்கு வாங்கவுள்ளதாகத் தகவல் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து மஸ்க்கின் புதிய பதிவு வந்துள்ளது.

"அடுத்து நான் கொகா கோலாவை வாங்குகிறேன். அதில் மீண்டும் கொக்கெய்னைச் சேர்ப்பேன்" என்று எலோன் மஸ்க் பதிவிட்டார்.

கொகா கோலா பானத்தின் ஆரம்பக்கட்ட செய்முறையில் 'கொக்கெய்ன்' போதைப்பொருள் தயாரிக்கத் தேவையான கொக்கோ இலைகள் சேர்க்கப்பட்டிருந்தன.

பானத்தில் அப்போது 3.5 மில்லிகிராம் அளவிலான கொக்கெய்ன் இருந்ததாக நம்பப்படுகிறது. கொகா கோலா பானங்களிலிருந்து அது 1903ஆம் ஆண்டில் நீக்கப்பட்டது. இதற்கிடையே மற்றொரு பதிவையும் மஸ்க் வெளியிட்டிருந்தார். 'மெக்டொனால்ட்ஸ் நிறுவனத்தை வாங்க உள்ளேன். ஐஸ்கிரீம் இயந்திரங்களை சரி செய்ய உள்ளேன்' என, அதில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எலோன் மஸ்க், சமூக வலைதளத்தில் வெளியிடும் பதிவுகளை, அவர் கிண்டலுக்காக சொல்கிறாரா அல்லது அர்த்தத்துடன் குறிப்பிடுகிறாரா என்பதை கணிக்க முடியாது. கொகா கோலா குறித்த பதிவும் அது போன்ற குழப்பத்தை ஏற்படுத்தியது.

எனினும் தம்மால் அதிசயங்களை செய்ய முடியாது என பதிவிட்டு தாம் கொகா கோலாவை வாங்கப் போவதாகக் கூறியது நகைச்சுவை தான் என உணர்த்தியுள்ளார் மஸ்க். அதே நேரம் ட்விட்டரை பொழுது போக்கு நிறைந்த ஒன்றாக மாற்ற முடியும் என உறுதி தருவதாகவும் மஸ்க் பதிவிட்டுள்ளார்.

ட்விட்டரை கட்டுப்பாடுகளற்ற சுதந்திரமான சமூக தளமாக மாற்றப்போவதாக மஸ்க் தெரிவித்திருந்த நிலையில், தற்போது பொழுதுபோக்கு நிறைந்ததாகவும் அது இருக்கும் எனவும் கூறியுள்ளார். வருங்காலங்களில் ட்விட்டர் எப்படி இருக்கும் என காட்டும் முன்னோட்டமாக மஸ்க்கின் தற்போதைய பதிவு பார்க்கப்படுகிறது.

## உக்ரைனுக்கு 33 பில்லியன் டொலர் நிதி உதவிக்கு அமெரிக்கா திட்டம்



உக்ரைனுக்கு ஆதரவு வழங்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் 33 பில்லியன் டொலர் மதிப்பிலான புதிய நிதியுதவித் திட்டத்தை முன்மொழிந்துள்ளார்.

அந்தத் திட்டத்தின் பெரும்பகுதி ஆயுதங்கள், வெடிபொருட்கள் போன்ற இராணுவ உதவிகளுக்குப் பயன்படுத்தப்படும். மேலும் உக்ரைனிய அரசாங்கத்துக்கு நேரடிப் பொருளாதார உதவியும் மனிதாபிமான உதவியும் வழங்க அது பயன்படுத்தப்படும்.

வரும் செப்டம்பர் வரை உக்ரைனுக்குத் தேவைப்படும் போர் முயற்சிகளுக்குக் கைகொடுக்க அமெரிக்கா வழங்கும் நிதியுதவி உதவும்.

இந்நிலையில், தடைசெய்யப்பட்ட ரஷ்யச் செல்வந்தர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட சொத்துகளை அமெரிக்கா விற்க முற்படுகிறது. அதற்கான பாராளுமன்ற ஒப்புதலைப் பெற திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக நடப்பிலுள்ள குற்றவியல் சட்டங்களைத் திருத்தவும் அது வகைசெய்யும். பறிமுதல் செய்யப்பட்ட சொத்துகளை விற்றுப் பெறப்படும் பணத்தை உக்ரைனுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அமெரிக்க பொருளாதாரம் சிக்கலை எதிர்கொண்டிருக்கும் நேரத்திலேயே இந்த உதவித் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மற்றும் மார்ச் மாதத்திற்கு இடையே மொத்த உள்நாட்டு உற்பத்தி 1.4 வீதம் வீழ்ச்சி கண்டிருப்பதுடன் 2022இன் முதல் காலாண்டில் அமெரிக்க பொருளாதாரம் சுருங்கி இருப்பதாக பொருளாதார ஆய்வுப் பணியகம் கடந்த வியாழக்கிழமை வெளியிட்ட தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இந்த உதவித் திட்டத்திற்கு அமெரிக்க பாராளுமன்றம் ஒப்புதல் அளிக்க வாய்ப்பு உள்ளதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2022 ஏப்ரல் 30 சனிக்கிழமை



**தொழுகை நேரம்**

30 ஆம் திகதி

| | |
|---|---|
| சுபஹ் | 04.39 |
| லுஹர் | 12.09 |
| அஸர் | 03.25 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.31 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 17

ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: அமாவாசை

இந்திய மருத்துவ உதவித் தொகையுடன்

# கொழும்பு துறைமுகத்துக்கு இந்திய கடற்படையின் கப்பல் வந்தடைவு



இந்திய கடற்படையின் Landing Ship Tank கப்பலான ஐஎன்எஸ் 'காரியல்' நேற்று (29) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இலங்கை கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கமைவாக வருகை தந்த கப்பலை துறைமுகத்தில் வரவேற்றனர்.

இக்கப்பலில் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட மருத்துவ உதவித் தொகை இலங்கைக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட உள்ளன.

124.8 மீ நீளமுள்ள Landing Ship Tank கப்பலின் கட்டளையிடும் அதிகாரி கமாண்டர் சுனில் எஸ் பட்டீல் தலைமை தாங்குகிறார் மற்றும் கப்பலின் துணையாக 170 பேர் இந்த கப்பலில் உள்ளனர்.

இதேவேளை, INS 'Gharial' இன் கட்டளை அதிகாரி நேற்று மாலை (ஏப்ரல் 29) மேற்கு கடற்படை கட்டளைத் தலைமையகத்தில் துணைத் தளபதி மற்றும் மேற்கு கடற்படை தளபதி ரியர் அட்மிரல் உபுல் டி சில்வாவை சந்தித்தார். இந்த சந்திப்பின் போது, இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட மருத்துவ உதவித் தொகை இலங்கைக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

அவர் நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில், இரண்டு கடற்படைகளுக்கிடையே நட்புறவை வளர்க்கும் நோக்கில், இலங்கை கடற்படையால் ஏற்பாடு செய்யப்பட்ட பல நிகழ்ச்சிகளில் INS 'Gharial' குழு உறுப்பினர்கள் பங்கேற்பர். இந்த கப்பல் நாளை (01) இலங்கையிலிருந்து புறப்பட உள்ளது.

ரமழான் சிந்தனை

## ஸகாதுல் பித்ரை நிறைவேற்றுவோம்

அருள் மறையாம் அல் குர்ஆன் அருளப்பட்ட இறையருள் வளம் நிறைந்த ரமழான் மாதத்தின் இறுதிப்பகுதியும் மிக வேகமாகக் கடந்து கொண்டிருக்கின்றது. இன்னும் சில தினங்களில் இவ்வருட ரமழான் மாதம் விடை பெறத் தயாராகிக் கொண்டிருக்கின்ற அதேநேரம் ஷவ்வால் மாதமும் நெருங்கி வந்தமுள்ளன. நாள், மணித்தியாலயம், நிமிடம், வினாடி என்றபடி ரமழான் எம்மை விட்டு நகர்ந்து கொண்டிருக்க, 'ஷவ்வால் மாதம் நாள், மணித்தியாலயம், நிமிடம், வினாடி என்றபடி எம்மை நோக்கி வந்து கொண்டிருக்கின்றது.

இவ்வாறான ஒரு முக்கியத்துவமான சூழலிலும் நோன்பு நோற்று இறை வணக்கங்களில் ஈடபட்டு வரும் இறைவிசுவாசிகள் நிறைவேற்ற வேண்டிய கடமையொன்று அவர்கள் முன்பாக இருந்து கொண்டிருக்கின்றது. அது தான் ஸகாதுல் பித்ர் ஆகும். இது இரண்டு இலக்குகளைத் தன்னகத்தே கொண்ட கடமையாக உள்ளது. ஒன்று நோன்பு காலத்தில் இறைவிசுவாசிகள் விட்ட சிறுதவறுகளுக்கு குற்றப்பரிகாரமாக அமைகிறது. மற்றையது நோன்பு பெருநாள் தினத்தை ஏழைகள், வருமானம் குறைந்தவர்கள், வசதி படைத்தவர்கள் உள்ளிட்ட அனைவரும் சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் கொண்டாட வேண்டும். அதுவும் நோன்பு பெருநாள் தொழுகைக்கு புறப்பட முன்னர் இக்கடமையை நிறைவேற்றி விட வேண்டும். அதுவே நபி வழியாகும். இது தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் பல சந்தரப்பங்களில் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

ஆகவே நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப ஸகாதுல் பித்ர் கடமையின் இலக்கும் நோக்கும் நிறைவேறும் வகையில் அதனை நிறைவேற்றுவது இன்றியமையாததாகும்.

தற்போதைய சூழலில் எமது நாட்டில் மக்கள் முகம் கொடுத்துள்ள பொருளாதார ரீதியிலான அசௌகரியங்களுக்கும் இது ஆறுதலாகவும் நிவாரணமாகவும் கூட அமைய முடியும். அதன் காரணத்தினால் இந்த ஸகாதுல் பித்ர் கடமையை திட்டமிட்ட அடிப்படையில் சீராகவும் ஒழுங்குமுறையாகவும் நிறைவேற்றிடுவதில் உச்சபட்ச கவனம் செலுத்துவோம். அதன் ஊடாகவும் இம்மையிலும் மறுமையிலும் நன்மைகள் பெற்றிட முயற்சிப்போம்.

மர்லின் மரிக்கார் ...



# பிரதமரை பதவி விலக்குவதாகவோ, பதவி விலகுமாறோ நான் ஒருபோதும் தெரிவிக்கவில்லை

ஜனாதிபதி தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பதவி விலகுமாறோ அல்லது அவரை பதவி விலக்குவதாகவோ தாம் எந்த ஒரு அறிவிப்பையும் விடுக்கவில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஆளும் கட்சி கூட்டத்தின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். அரசாங்கத்திற்குள்ளோ அல்லது பொதுஜன பெரமுன கட்சிக்குள்ளோ நெருக்கடி நிலையை ஏற்படுத்துவதற்கு தமக்கு எந்த அவசியமும் கிடையாது என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார். நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைக்கு தீர்வு காணும் வகையில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அதற்காக அனைவரினதும் ஒத்துழைப்புக்களை பெற வேண்டியுள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார்.

மேற்படி கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட பொது ஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்காலங்களில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலக வேண்டும் என்றும் சர்வகட்சி இணைந்த இடைக்கால அரசாங்கமொன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் பல்வேறு தரப்பிலிருந்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தாம் பிரதமர் பதவியில் இருந்து விலகப் போவதில்லை என்றும் இடைக்கால அரசாங்கத்திலும் தாமே பிரதமராக பதவி வகிக்கப்போவதாகவும் கூற்றுக்களை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

# உலகத் திருக்குறள் மாநாடும் மலர் வெளியீடும்

'உலகத் திருக்குறள் நான்காவது மாநாடு 2022' ஏப்ரல் 23, 24 ஆம் திகதிகளில் மைசூர் பல்கலைக்கழக செஞ்சூரியன் அரங்கில் நடைபெற்றது.

பெங்களூர் முனைவர் சீனிவாசன் தலைமையில் கருத்தரங்கு அமர்வை மைசூர் தமிழ்ச் சங்க செயலர் ரகுபதி துவக்கி வைக்க திருக்குறள் குறித்து சங்கரி சீனிவாசன் மலையாளத்திலும், சாவித்திரி தெலுங்கிலும், ஆனைவாரி ஆனந்தன் ஆங்கிலத்திலும், பத்மபிரியா தமிழிலும் பழனிச்சாமி கன்னடத்திலும் உரையாற்றினர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் மாநாட்டு மலரை தஞ்சாவூர் தமிழ் பல்கலையின் அயல்நாட்டு கல்வித் துறை தலைவர் குறிஞ்சிவேந்தன் வெளியிட்டு உரையாற்றினார். முதல் நூலை கடையநல்லூர் அரசு கலைக் கல்லூரி முதல்வர் வேலம்மாள் பெற்றுக்கொண்டார்.

இம்மாநாட்டில்

06

# மோதலுக்குப் பின்னரான நல்லிணக்கம் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகள்

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பீரிஸ் இராஜதந்திரிகளுக்கு விளக்கம்



மோதலுக்குப் பிந்தைய நல்லிணக்கம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பது, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை மேலும் வலுப்படுத்து ஆகியவற்றில் இலங்கை அரசாங்கம் அடைந்துள்ள முன்னேற்றத்தை ( 26) தூதுவர்கள் குழுவுடனான சந்திப்பின் போது வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்ட கணிசமான திருத்தங்கள் மற்றும் பயங்கரவாதத்தின் சமகால பரிமாணங்களுக்கு ஏற்ப அதனைக் கொண்டு வருவதற்கு விரிவான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பீரிஸ் விளக்கமளித்தார். அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இலங்கை ஜனாதிபதி நடத்திய சந்திப்பு மற்றும் நிலம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதிகளின் பிரச்சினைகள் உட்பட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களைப் பாதிக்கும் சில பிரச்சினை களுக்குத்

06

# உலகுக்கு ஏற்ற பட்டதாரிகளை உருவாக்குவது பல்கலைகளின் குறிக்கோளாக இருப்பது அவசியம்



இலங்கை சமூகத்துக்கும் உலகுக்கும் பொருந்தக்கூடிய வகையில் பட்டதாரிகளை உருவாக்குவது பல்கலைக்கழகங்களின் குறிக்கோளாக இருக்க வேண்டுமென்று உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் (28) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட உயர்கல்வி இராஜாங்க அமைச்சர், பல்கலைக்கழங்களால் வழங்கப்படும் பட்டப்படிப்புக்களின் தரத்தை விருத்தி செய்யவேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பின்னர் பெரும்பாலானோர் பல்கலைக்கழக வாய்ப்பைப் பெறுவதில்லை. நாட்டின் அனைத்து பிள்ளைகளுக்கும் உயர் கல்வி வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இளம் சந்ததியினருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் கோரும் அரசியல் உட்பட, அரச கட்டமைப்பின் மாற்றம் உள்ளிட்டவை என்பன அரச பல்கலைக்கழகங்களிலிருந்தே ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அரசியலுக்கு அப்பால் சுதந்திரமானதும் மற்றும் வெளிப்படையான சிந்தனை மற்றும் அறிவாற்றலுள்ள சமூகத்தையும் உருவாக்குவதற்கும் கடுமையாக உழைக்க வேண்டுமென்றும் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் மேலும் குறிப்பிட்டார். இந்த ஊடகச் சந்திப்பில் கருத்து வெளியிட்ட கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா, இந்த வருடத்திற்கான கல்வித் திட்டங்களை டிசம்பர் 21ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்ய அமைச்சு எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிட்டார்.

அனைத்து பரீட்சைகளும் இந்தத் தினத்திற்கு முன்னர் நிறைவு செய்யப்படும். பாடசாலை நேரத்திற்கு மேலதிகமாக ஒரு மணிநேரத்தை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் பின்னர் இந்தத் தீர்மானம் இரத்துச் செய்யப்பட்டது.

மேலதிக காலம் தேவைப்பட்டால் சனிக்கிழமை நாட்களை இதற்காக பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# ரயில் சேவை உட்பட அரச சேவை நேற்று வழமைக்குத் திரும்பியது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ரயில்வே தொழிற்சங்கங்கள் மேற்கொண்டிருந்த ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் நேற்று நள்ளிரவுடன் நிறைவு பெற்றதுடன் நேற்று காலை முதல் ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பியதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் அரசாங்க மற்றும் தனியார் துறை தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களையும் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தையும் மேற்கொண்டிருந்தன. அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ரயில்வே தொழிற் சங்கங்களும் அந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டன.

ரயில் சேவைகள் திடீரென நிறுத்தப்பட்டமை காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டது. ரயில்வே தொழிற்சங்கங்கள் நேற்று அது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

தொழிற்சங்கங்களின் எதிர்ப்புக்கு அரசாங்கம் பதில் வழங்கத் தவறினால் எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறவுள்ள ஹர்த்தால் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ரயில்வே தொழிற் சங்கங்களும் பங்கேற்கும் என தெரிவித்தது.

அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் போக்குவரத்து, சுகாதாரம், நிர்வாக சேவை, மின்சாரத் துறை, தபால் துறை மற்றும் ஆசிரிய தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்தே மேற்படி நாடளாவிய ஆர்ப்பாட்டங்களையும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தையும் மேற்கொண்டிருந்தன.(ஸ)

தமிழக அரசின் ரூ.123 கோடி நிதியுடன்

# இலங்கை மக்களுக்காக சொந்த நிதியில் ரூ.50 இலட்சம் நன்கொடை



ஓ. பன்னீர்செல்வம் அறிவிப்பு

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**

இலங்கை மக்களுக்காக தனது சொந்த நிதியிலிருந்து 50 இலட்சம் ரூபாவை (இந்திய ரூபாய்) வழங்குவதாக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு தமிழ்நாடு அரசு சார்பில் உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள், உயிர் காக்கும் மருந்துகள் உள்ளிட்டவை அனுப்ப மத்திய அரசு அனுமதியளிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்தார். இந்த தீர்மானத்தில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஓ. பன்னீர்செல்வம் பேசுகையில், "இலங்கை நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. தமிழர்கள் மனித நேயத்தில் உலகத்திலேயே உயர்ந்தவர்கள் என்பதன் அடையாளமாக இந்தத் தீர்மானமுள்ளது. அரசு சார்பில் வழங்கப்படும் 123 கோடி ரூபா மதிப்புள்ள நிவாரண நிதியுடன் சேர்த்து நான் சார்ந்துள்ள குடும்பம் சார்பில் 50 இலட்சம் ரூபா நிவாரண நிதியாக தருகிறேன்" என்று தெரிவித்தார்.

இதன்பிறகு பேசிய முதல்வர் ஸ்டாலின், "இந்த உதவி முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ளது. இன்னும் தேவை என்றால் அடுத்தகட்டமாக வழங்க தமிழக அரசு என்றும் தயாராக உள்ளது. மக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அரசியல் கட்சிகள், வர்த்தக அமைப்பினர் இலங்கை நாட்டுக்கு உதவி செய்ய முன் வந்தால் அவற்றை ஒருங்கிணைத்து மத்திய அரசு மூலம் வழங்க அரசு தயாராக உள்ளது. அதற்கு முன்னோட்டமாகவே எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஓ. பன்னீர்செல்வம் தனது சொந்த நிதியில் இருந்து 50 இலட்சம் ரூபா வழங்கப்படுமென்று அறிவித்து இருக்கிறார். மற்றவர்கள் இதைப் பின்பற்ற வேண்டுமென்ற அடிப்படையில் அறிவித்துள்ளார். அவருடைய நல்ல எண்ணத்துக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 17ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 28

## குறள் தரும் சிந்தனை



மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்

பெருமைமிக்க குடியில் பிறந்தவராயினும், அவரிடம் சோம்பல் குடியேறி விட்டால் அதுவே அவரைப் பகைவர்களுக்கு அடிமையாக்கி விடும்.

# மின்சார சிக்கனத்தில் மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்

நாட்டில் எரிபொருளுக்கான பற்றாக்குறை இன்னுமே நீங்கியபாடாக இல்லை. டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு ஆகியவற்றுக்கான பற்றாக்குறை தொடர்ந்து கொண்டே செல்கின்றது. எரிபொருள் பற்றாக்குறை காரணமாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் மின்சார உற்பத்திக்காக நாம் அதிகளவில் எரிபொருளையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. நாட்டுக்கு எரிபொருள் வருகை குறைந்திருப்பதால் போதியளவு மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எமது நாட்டில் மாத்திரமன்றி அயல்நாடான இந்தியாவிலும் தற்போது எரிபொருள் விலையுயர்வு மக்களை அதிகம் பாதித்துள்ளது. இந்தியாவில் அண்மையில் ஆறு நாட்களுக்குள் ஐந்து தடவைகள் எரிபொருள் விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. அந்நாட்டைப் பொறுத்தவரை இவ்வாறான விலை அதிகரிப்பு முன்னர் ஒருபோதுமே மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் மக்கள் அதிருப்தியடைந்தனர்.

இலங்கையைப் பொறுத்தவரை எரிபொருள் பற்றாக்குறையானது போக்குவரத்துத் துறையை மாத்திரம் பாதிக்கவில்லை. மின்சார உற்பத்தியையும் அதிகளவில் பாதிக்கச் செய்கின்றது. ஏனெனில் எமது நாட்டின் மின்னுற்பத்திக்காக சுமார் அறுபது சதவீதம் எரிபொருளையே நாம் நம்பியிருக்கின்றோம். நாட்டில் எரிபொருள் தங்குதடையின்றிக் கிடைக்கவில்லையாயின் மின்னுற்பத்தி பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகின்றது.

நாட்டின் தேவைக்கேற்றவாறு மின்சார உற்பத்தியை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று நீண்ட காலமாகவே வலியுறுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் இதுவரை ஆட்சியிலிருந்த எந்தவொரு அரசாங்கமும் மின்னுற்பத்தியை அதிகரிக்கும் மாற்றுத் திட்டங்களில் உரிய கவனம் செலுத்தவில்லை. இதன் காரணமாகவே நாம் இன்று மின்நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

நீர் மின்னுற்பத்தி மற்றும் எரிபொருள் மூலமான மின்னுற்பத்திக்கு அப்பால் ஏனைய மாற்றுவழிகளில் மின்சாரத்தை உற்பத்தி செய்வது குறித்து உலக நாடுகள் முன்கூட்டியே கவனம் செலுத்தத் தொடங்கி விட்டன. சூரியப்படல், காற்றாலை, கடலலை போன்று புதுப்பிக்கத்தக்க சக்திமுதல்களில் இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் உலகின் பல நாடுகள் இன்று அதிக கவனம் செலுத்தி வருகின்றன.

ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரை இப்போது தான் அதுபற்றி ஓரளவு கவனம் செலுத்தி வருகின்றோம். மின்நெருக்கடி அதிகரித்த பின்னர்தான் எமது நாடு மாற்றுவழி மின்னுற்பத்தி முறைகள் பற்றிப் பேசத் தலைப்படுகின்றது. புதுப்பிக்கத்தக்க சக்திமுதல்களில் இருந்து மின்னுற்பத்தி மேற்கொள்ளும் திட்டமானது உடனடியாக மேற்கொள்ளக் கூடியதல்ல என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அத்திட்டம் படிப்படியாக நீண்ட காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியதாகும்.

எமது நாடு இனிமேலாவது மாற்றுவழி மின்னுற்பத்தித் திட்டங்கள் மீது கவனம் செலுத்த வேண்டியது மிக அவசியமாகும். இல்லையேல் எதிர்காலத்தில் நாம் மேலும் அதிகளவில் மின்நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படலாம். அதேசமயம் மின்சாரத்தை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியது குறித்தும் இலங்கையில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

மின்சாரத்தை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நாட்டு மக்களுக்கும், நிறுவனங்களுக்கும் அரசினால் அடிக்கடி வேண்டுகோள் முன்வைக்கப்பட்டு வருகின்றது. ஆனால் அதுபற்றி கவனம் செலுத்தப்படுவது குறைவாகும். மக்கள் மாத்திரமன்றி அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களும் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தாமல் விரயம் செய்வதையே காணக் கூடியதாகவுள்ளது. மின்சார சிக்கனம் குறித்து மக்கள் ஒவ்வொருவரும் சிந்தித்துச் செயற்பட்டால் மாத்திரமே நாட்டில் மின்சார விரயத்தைக் கட்டுப்படுத்த முடியுமென்பது உண்மை.

அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள் பலவற்றை எடுத்துக் கொண்டோமானால் மின்விசிறிகளைப் பயன்படுத்தாமல், வளிச்சீராக்கிகளையே (எயார் கண்டிஷன்) இன்னும் பயன்படுத்தி வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. வளிச்சீராக்கிகளைப் பயன்படுத்த வேண்டாமென்றும், அதற்குப் பதிலாக மின்விசிறியைப் பயன்படுத்துமாறும் அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், அது பற்றி அலட்சியம் செய்யப்படுவதையே காண்கிறோம்.

நாட்டில் மின்சாரத்தின் தேவை அதிகரித்துள்ளது. ஒவ்வொரு வீட்டினுள்ளும் நவீன இலத்திரனியல் மற்றும் மின்சார சாதனங்கள் பல்கிப் பெருகி விட்டன. நாம் ஒவ்வொருவருமே நவீன சாதனங்களுக்கு பழக்கப்பட்டு அடிமையாகிப் போய் விட்டோம். அவற்றிலிருந்து நாம் மீள்வது இனிமேல் சாத்தியமில்லை. நவீன மின்சாதனங்களின் வருகை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. எனவே மின்னுற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை தவிர்க்க முடியாததாகும்.

ஆனாலும், மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவதில் நாம் கூடிய கவனம் செலுத்துவோமானால் நெருக்கடியை ஓரளவுக்கேனும் குறைக்க இயலும். நாட்டு மக்கள் ஒவ்வொருவருமே இவ்விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டுமென வலியுறுத்த விரும்புகின்றோம்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கையில் தமிழர்களுக்கு மாத்திரமன்றி அனைத்து மக்களுக்கும் உதவ நாங்கள் தயார்!

## தமிழக முதல்வர் ஸ்டாலின் சட்டசபையில் அறிவிப்பு



இலங்கைத் தமிழர்களுக்கு திமுக ஆற்றிய பணிகளை அனைவரும் நன்கு அறிவீர்கள். இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிட வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள தமிழர்களுக்கு உதவிட ஒன்றிய அரசு அனுமதி அளிக்கக் கோரி சட்டசபையில் தனி தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. இலங்கை தமிழர்களுக்கு உதவிட அனுமதி கோரும் அரசினர் தீர்மானத்தை சட்டசபையில் முன்மொழிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று உரையாற்றினார்.

"இலங்கையில் சுதந்திரத்திற்கு பின்னர் இதுவரை இல்லாத அளவுக்கு பொருளாதாரம் மோசமான நிலையை சந்தித்துள்ளது. இலங்கையில் நிலவும் பொருளாதார சிக்கலால் கடந்த சில மாதங்களாக அத்தியாவசிய பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். பெரும்பாலான அத்தியாவசிய பொருட்களை இலங்கை வெளிநாடுகளை நம்பி, அங்கிருந்து இறக்குமதி செய்து வருகிறது. இதனை மேற்கொள்ளபோதுமானபணம் டொலரில் இல்லாததால், பொருளாதார நெருக்கடி இலங்கை மக்களை கசக்கி பிழிந்து கொண்டிருக்கிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பல மடங்கு விலையானது உயர்ந்துள்ளது. ஒரு கிலோ அரிசியின் விலை 300 ரூபாயை தொட்டுள்ளது. பச்சை மிளகாய் விலையோ கிலோ ஒன்றுக்கு ஆயிரம் ரூபாயாக உள்ளது. பெட்ரோல், டீசல் விலையும் பல மடங்கு அதிகரித்துள்ளது.

குழந்தைகளுக்கு பால் பொருட்கள் கூட வாங்க முடியாத அளவிற்கு விலை உள்ளதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் இலங்கை மக்கள் அந்த நாட்டு அரசுக்கு எதிராக தொடர் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இது ஒரு பக்கம் என்றால் இலங்கையில் குழந்தைகளுடன் வாழ முடியாமல் தினந்தோறும் தமிழகம் வரும் இலங்கை தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே வருகிறது. உணவு இல்லாமல் உள்ள இலங்கை தமிழர்களுக்கு உதவிடும் வகையில் நிவாரணம் பொருட்கள் வழங்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது".

இவ்வாறு ஸ்டாலின் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கைத் தமிழர்களுக்கு உதவ தமிழக அரசு உறுதியோடு உள்ளதாகவும் அத்தியாவசியப் பொருட்களை அனுப்புவதற்கு உரிய வசதி செய்து தருமாறும் மத்திய அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியிருந்தார். மேலும் இலங்கைத் தமிழர்களுக்குத் தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து உணவு தானியங்கள், காய்கறிகள், மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை அனுப்புவதற்கு உரிய வசதியை செய்து தருமாறும் அந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

மத்திய அரசு இது தொடர்பாக எந்த வித அனுமதியும் வழங்காத நிலையில், தமிழக சட்டசபையில் சிறப்பு தீர்மானம் கொண்டு வந்துள்ளது. தீர்மானத்தை முன்மொழிந்து முதல்வர் மு.க ஸ்டாலின் உரையாற்றினார். சட்டசபையில் பேசிய முதல்வர் மு.க ஸ்டாலின், "இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிட வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு என்று முதல்வர் குறிப்பிட்டார்.

தமிழர்களுக்கு மட்டுமல்ல இலங்கையில் அனைத்து மக்களுக்கும் சேர்த்தே உதவ தமிழக அரசு முடிவு செய்துள்ளதாக முதல்வர் கூறினார். அனைவரும் கட்சி பேதம் பாராமல் இந்த தீர்மானத்திற்கு ஆதரவு தர வேண்டும் என்றும் முதல்வர் மு.க ஸ்டாலின் வலியுறுத்தினார்.

இதேவேளை பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் அண்டை நாடான இலங்கைக்கு அத்தியாவசிய பொருட்கள், உயிர்காக்கும் மருந்துகள் வழங்க மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என உதவ தமிழக சட்டசபையில் நேற்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்மொழிந்த சிறப்பு தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

# சமூக-தொழில்நுட்ப புத்தாக்கங்கள் மூலம் கைவினைஞர் தொழிலுக்கு வலுவூட்டும் ECRAFTT



தொலைதூர கிராமங்களில் உள்ள பல உள்ளூர் கைவினைஞர்களின் இதயங்களில் எதிரொலிக்கும் பெயரே Ecraftt ஆகும். ஒரு காலத்தில் கனவாகத் தோன்றியதை, உண்மையான யதார்த்தமாக அது மாற்றியுள்ளது. பாரம்பரியத்தை நவீன தொழில்நுட்பத்துடன் இணைப்பதன் மூலம், நவீன கருத்தாக்கத்துடன் உள்ளூர் பாரம்பரிய கைவினைப் பொருட்களை உலகின் முன் கொண்டு செல்லும் பணியில் Ecraftt செயற்பட்டு வருகின்றது.

தூரப் பிரதேசங்களிலுள்ள கைவினைக் கிராமங்களில் தங்களது நேரத்தைச் செலவழிக்கும் திட்டத்தில் பணியாற்றிய மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைந்த வடிவமைப்புத் துறையைச் (Department of Integrated Design) சேர்ந்த வடிவமைப்பாளர்களான மாணவர்களுடன் ஆரம்பமான ஒரு கதையே, தற்போது ஒரு புதிய நம்பிக்கையுடன் முழு தொழிற்துறையையும் மீண்டும் உருவாக்கியுள்ளது.

இந்த கைவினை கிராமங்கள் அதற்கு அவசியமானவற்றைப் பெறுவதை உறுதி செய்வதைக் கருத்தில் கொண்டு, ஒரு சில தீர்மானம் மிக்க மாணவர்களால், Ceylon Craft Lab (PVT) Ltd நிறுவனத்தின் ஒன்லைன் தளமாக Ecraftt அறிமுகப்படுத்தப்பட்டது. இது தொழில்நுட்ப ரீதியாகவும் நிதி ரீதியாகவும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டமான (UNDP) HackaDev மூலம் உதவியளிக்கப்படுகிறது.

இத்திட்டமானது, இலங்கையின் தனித்துவமான இளைஞர்கள் மற்றும் புத்தாக்கத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு வாய்ப்புகள் மற்றும் தேவையான அடுத்த தலைமுறை திறன்களை வழங்குவதன் மூலம், அவர்கள் புத்தாக்கம் மிக்கவர்களாகவும், தொழில்முனைவோர்களாகவும், நிலைபேறான வகையில் மிகவும் அழுத்தமான அபிவிருத்தி சவால்களை எதிர்கொள்வதற்கு தலைமை தாங்குபவர்களாகவும் மாற உதவுகிறது.

HackaDev Enterprise Support Program (HESP) ஆனது, கொவிட்19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள HackaDev பழைய மாணவர் வலையமைப்பிலுள்ள நிறுவனங்களை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் தொழில் முனைவோரை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட ஒரு முயற்சியாகும். 2020/21 இல் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட முதல் குழுவிலுள்ள 15 நிறுவனங்களுக்கு 6 மாதங்களுக்கான பரந்த மேம்பாட்டு உதவியை வழங்கியது. HESP தலையீட்டின் மூலமான ஆரம்ப நிதியுதவி மற்றும் நடைமுறை பாதுகாப்பு உதவி செயன்முறையை நிர்வகிப்பதற்கான நிபுணர் சேவை வழங்குநராக Curve Up திகழ்கின்றது. அது தொழில்முனைவோரின் பயணத்தில் அவர்களுக்குத் தேவையான உதவியையும் வழிகாட்டல்களையும் வழங்குவதில் வெற்றிகரமாக இருந்து வந்துள்ளதுடன், இத்திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதற்கான பங்களிப்பையும் வழங்குகிறது.

Ecraftt ஆனது உண்மையான இலங்கை கைவினைப் பொருட்களை கொண்ட நிறுவனமாகும். இது புகழ் பெற்ற முறையான கையால் வரையப்பட்ட பத்திக் வாழ்த்து அட்டைகள் முதல் கைத்தறிகளால் நெசவு செய்யப்பட்ட கைப்பைகள், நூல்களால் பின்னப்பட்ட நெக்லஸ்கள் மற்றும் நெய்யப்பட்ட தும்பறை பெட்டி கைப்பை போன்ற, கைகளால் ஆக்கப்பட்ட பல்வேறு பொருட்களை கொண்டுள்ளது. Ecraftt.com தளமானது, நாட்டின் பாரம்பரிய கைவினை சமூகத்தை வலுவூட்டி, மேம்படுத்தும் அதே வேளையில், இலங்கையில் நிலைபேறான கைவினைத் துறையின் தூரநோக்கை அடையும் வகையில் மேலும் பல வழிகளில் அதன் பலத்தை விரிவுபடுத்துகிறது.





Ecraftt இன் இணை நிறுவுனரும் அதன் பணிப்பாளருமான சமூதிக லியனகே கருத்து வெளியிடுகையில், "இந்நிறுவனமானது, கொள்வனவாளரையும் கைவினைப்பொருட்களையும் இணைப்பதை மாத்திரம் கொண்டதல்ல. இது தொடர்பான கதைகளையும் இணைக்கின்றது. அவ்வாறில்லையெனில் அது யாருமே கேள்விப்படாத ஒன்றாக அமைந்து விடும். கைகளால் வடிவமைக்கப்பட்டு செய்து முடிக்கப்பட்ட அனைத்து தயாரிப்புகளும் தலைமுறை தலைமுறையாக கொண்டு செல்லக் கூடிய பல கதைகளைக் கொண்டிருக்கும் என்பதை Ecraftt அறிந்துள்ளது. எனவே மக்கள் ஒவ்வொரு முறையும் எம்மிடமிருந்து ஒரு பொருளை வாங்கும் போது, அவர்கள் ஒரு கலைப் படைப்பை பெறுவது மட்டுமல்லாது, இலங்கையின் கைவினைத் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அழகான கதையின் ஒரு பகுதியையும் கொண்டு செல்கிறார்கள்." என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "எமது பணியின் நோக்கம் இன்னும் முடியவில்லை, ஆனால் நாங்கள் உங்களுக்கு சொல்லக் கூடியது யாதெனில், நாங்கள் முன்னேறுவதில் உறுதியாக இருக்கிறோம். எம்மிடம் ஆர்வமுள்ள கைவினைஞர்களின் வலையமைப்பு உள்ளது. அவர்கள் எம்மை உச்சத்திற்கு அழைத்துச் செல்ல எமது சிறகுகளாக பணியாற்றுகிறார்கள். நாம் எப்போதும் இந்த வலையமைப்பை மேலும் விரிவுபடுத்த விரும்புவதோடு, ஆர்வமுள்ள அனைத்து தரப்பினரையும் எம்முடன் இணையுமாறு அழைப்பு விடுக்கிறோம்" என்றார்.

கைவினைத் தொழில்துறையை சவாலுக்குட்படுத்தும் வகையில், புதிய சூழ்நிலைகளை உருவாக்கி, அனைவரின் கண்களையும் திறக்கும் வகையில் கொவிட்19 அனைத்து நிலைமைகளையும் மாற்றியமைத்தது. ஆயினும் ஏனைய தளங்களைப் போலல்லாமல், உள்ளூர் மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களின் தேவைகளை, பாரம்பரிய கைவினைஞர்கள் பூர்த்தி செய்ய உதவும் ஒரு தளத்தை ஏற்படுத்தும் சவாலை எதிர்கொள்வதற்காக Ecraftt முன்வந்தது. இந்த கைவினைஞர்களை ஆதரவு வழங்குவதன் மூலம், அவர்களின் கதைகள் வெளியில் வருவதையும், விருப்பம், தற்காலபோக்கு மற்றும் சந்தை தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில், புதிய பயன்பாடுகள், விடயங்கள் பற்றி அவர்களுக்குத் தெளிவூட்டுவதன் மூலம் வணிக ரீதியிலான தயாரிப்புகளுடன் அவர்கள் போட்டியிடுவதையும் உறுதிசெய்து, Ecraftt அவர்களின் மதிப்பை மேலோங்கச் செய்கிறது.

இலங்கையில் உள்ள UNDP, அதன் பங்காளிகளுடன் இணைந்து, உறுதியான மற்றும் நிலைபேறான நடவடிக்கையின் மூலம் இளம் தொழில்முனைவோரை வலுப்படுத்த உறுதிபூண்டுள்ளதுடன், இதுபோன்ற பல HackaDev மாணவ தொழில்முனைவோருக்கு, அவர்கள் கொவிட் தொற்று மற்றும் குறிப்பிடத்தக்க சமூகபொருளாதார விளைவுகளிலிருந்து வெளிவருவதற்கும், அவர்கள் சிறப்பாக முன்னோக்கி வெற்றிநடைபோடவும், எதிர்வரும் ஆண்டுகளிலும் ஆதரவளிக்க எதிர்பார்த்துள்ளது.

Ecraftt மற்றும் அதன் தயாரிப்புகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு, www.ecraftt.com எனும் தளத்தைப் பார்வையிடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

எஸ். கவிந்தன்...

# இலங்கையின் மெய்யியல் துறையில் ஈடிணையற்ற சிந்தனையாளராகத் திகழ்பவர் செ.வே.காசிநாதன்

"இலங்கையின் மெய்யியல் துறையில் ஈடிணையற்ற சிந்தனையாளராகத் திகழ்பவர் செ.வே.காசிநாதன் ஆவார். அவர் ஆக்கி அளித்திருக்கும் விற்கன்ஸ்ரைன் பற்றிய நூல் தமிழர்களுக்குக் கிடைத்திருக்கும் பெரும் பொக்கிஷமாகும். தமிழகத்தில் இந்த நூல் ஆய்வாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது" என்று மு.நித்தியானந்தன், செ.வே.காசிநாதனின் 'விற்கன்ஸ்ரைன்: மொழி, அர்த்தம், மனம்' என்ற நூலை வெளியிட்டு வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

"இருபதாம் நூற்றாண்டின் முக்கிய மெய்யியலாளர்களில் ஒருவர் என மதிக்கப்பட்ட விற்கன்ஸ்ரைன் பற்றிப் பல்வேறு மொழிகளில் கட்டுரைகளும், ஆய்வுகளும், புனராய்வுகளும் வெளிவந்து கொண்டிருந்த போதிலும் தமிழ் மொழியில் ஆய்வாளர் செ.வே.காசிநாதனின் 'விற்கன்ஸ்ரைன்: மொழி, அர்த்தம், மனம்' என்ற நூலைத் தந்திருப்பது மிகுந்த வரவேற்புக்கும், பாராட்டுக்குமுரியதாகும்" என்று லண்டனில் நடைபெற்ற காசிநாதனின் நூல் வெளியீட்டு விழாவில் தலைமை உரையாற்றிய எழுத்தாளர் நவஜோதி யோகரட்னம் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், " மெய்யியலாளர்களது மனதை விஞ்ஞானத்தின் முறை என்பது எப்போதும் ஈர்த்துக் கொண்டே இருந்ததால், விஞ்ஞானத்திற் போல் வினாக்களைக் கேட்டு விடை தர வேண்டும் என்ற சபலத்திலிருந்து அவர்கள் தப்ப முடிவதில்லை என்றும் இயற்கை நிகழ்ச்சிகளை இயன்றளவுக்கு ஒரு சில விதிகளினாலேயே விளக்குவது போலவும், பொதுவிதி ஒன்றின் மூலம் கணிதத்தில் பல விடயங்களை ஒருமைப்படுத்துவது போலவும், ஓரிரு விளக்கங்களினால் அனைத்தையும் தெளிவுபடுத்த, மெய்யியலாளர்கள் செய்கிற முயற்சி, தவறான பார்வைக்கு இட்டு சென்றிருக்கிறது. அதற்கான வழிகளை ஏற்கெனவே இருக்கும் அநேக குழப்பங்களுக்குக் காரணமாகிறது என்று விற்கன்ஸ்ரைன் கூறியிருப்பதாகக் காசிநாதன் குறிப்பிடுவதும் சிந்தனைக்கு உரிய ஒன்றாகும்" என்று தெரிவித்தார்.

செ.வே.காசிநாதனின் நூல் மீது சிறப்புரையாற்றிய எஸ். ராகவன், "நாம் இதுவரையும் மொழியில் அதன் சொற்களில் அர்த்தங்கள் பொதிந்திருப்பதாக பார்த்து வந்த பழக்கம் எம்மை மெய்யியல் வழிமுறைகளில் தொடர்ந்து தேடிக் கொண்டிருக்கிறோம். போலிக்கதவுகளை திறக்க முயல்கின்றோம். நிஜக்கதவு பின்னால் இருக்கிறது. திரும்பிப்பார் என்கிறார் விட்கன்ஸ்டைன். இந்த தரிசனத்தில் காசிநாதன் தனது பார்வைகளை முன்வைக்கிறார்" என்று குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ," தத்துவக்கோட்பாடு ஒன்றினால் மொழியாடல் தரும் அர்த்தத்தை கட்டி விட முடியாது. இவ்வகையில் விட்கின்ஸ்டைன் தனது முறைமைக்கும் சிந்தனை வடிவத்துக்கும் கொடுக்கும் பெயர் மொழியின் ஆட்டம் அல்லது ஆற்றுகை (game). நாம் மொழியாடுகையில் உத்தரவு, கேள்வி கேட்டல், உண்ணுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளின் மூலமாக மொழிக்கான அர்த்தத்தை கொடுக்கிறோம். அது ஒரு சமூக நடவடிக்கை. சொற்களின் சாரம் சொற்களிலல்ல; அவற்றின் செயல்பாட்டில் மூலமாகவே அர்த்தம் பெறுகின்றன என்கின்ற விற்கன்ஸ்டைனின் வாதத்தை முன்வைக்கிறார் காசிநாதன்" எனக் குறிப்பிட்டார்.

மார்க்சிய செயற்பாட்டாளர் வேலு கருத்துரைக்கையில், சொற்கள் என்பன வெறும் சொற்களாக மட்டுமே இருப்பதில்லை.நாங்கள் என்ன செய்யலாம் என்பதை வரையறுக்கும் எல்லைப்பரப்பாகவும் அவை திகழ்வதால்தான் நாம் அவற்றுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்ற ஸ்லவோஜ் ஸிசெக் என்ற அறிஞரின் குறிப்பினை முன்வைத்தார்.

நெல்சன் மண்டேலாவின் சர்வதேச நினைவு தினத்தின் போது பிரபலங்களின் உரைகளை செவிப்புலன் இழந்தோருக்காக சைகை மொழியில் மொழிபெயர்த்த மொழிபெயர்ப்பாளர் இடையில் ஸ்கிஸோப்ரெனியா என்ற உளக்கோளாற்றின் தாக்கத்திற்குட்பட்டதால், அவர் சைகை மொழியில் மொழிபெயர்த்ததற்கு எந்த அர்த்தமும் இல்லை என்று கண்டறியப்பட்டது.ஆனால், அவரது சைகை மொழியில் ஒரு அர்த்தமும் இல்லை எனினும், அந்த நினவு தின நிகழ்வு முழுவதுமே எந்த அர்த்தமுமில்லாத போலி நிகழ்வுதான் அது என்ற உண்மையை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார் என்று ஸிசெக் அதற்கு விளக்கமளித்தார்.அங்கு பேசியவர்கள் வடித்ததெல்லாம் வெறும் முதலைக் கண்ணீர்தான், அவர்களின் சுயவிளம்பரப் பிதற்றல்களே தவிர அவர்களின் உரைகள் எல்லாமே நொன்சென்ஸ்தான் என்று எழுதியதாகவேலு தனது உரையில் குறிப்பிட்டார்.

விம்பம் கலை, இலக்கிய அமைப்பின் பதினெட்டாம் ஆண்டின் சிறப்பு நிகழ்வாக அமைந்த இவ்விழாவில் செ.வே.காசிநாதனின் 'விற்கன்ஸ்ரைன்: மொழி, அர்த்தம், மனம் ' என்ற நூலினை இலக்கிய விமர்சகர் மு.நித்தியானந்தனிடமிருந்து இ.பத்மநாப ஐயர் பெற்றுக் கொண்டார். கொரோனா தொற்றின் நீண்ட முடக்கத்தின் பின் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்டோருக்கு விம்பத்தின் சார்பில் ஓவியர் கே.கே.ராஜா நன்றி தெரிவித்தார்.








## லண்டனின் நூல் வெளியீடு

# இலங்கை, பாகிஸ்தான் நாடுகள் போன்று நேபாளத்திலும் பொருளாதார நெருக்கடி

கடந்த சில வாரங்களாகவே மிக பரப்பரப்பாக பேசப்பட்டு வரும் விஷயங்களில் ஒன்று இலங்கை, பாகிஸ்தானின் பொருளாதார நெருக்கடி. தற்போது இலங்கை, பாகிஸ்தானை அடுத்து நேபாளமும் பிரச்சினையை எதிர்கொண்டு வருகின்றது. இலங்கை மற்றும் பாகிஸ்தானை போலவே நேபாளத்தின் அந்நிய செலாவணி கையிருப்பும் கரைந்து வருகின்றது.




கடந்த மார்ச் மாத நிலைவரப்படி, நேபாளத்தின் அந்நிய செலாவணி கையிருப்பு வெறும் 975 மில்லியன் டொலராக குறைந்துள்ளது. இது கடந் த ஆண்டு ஜுலையில் 1175 மில்லியன் டொலராக இருந்தது. இதற்கிடையிலான 7 மாத காலகட்டத்தில் மட்டும் 200 மில்லியன் டொலர் அந்நிய செலாவணி குறைந்துள்ளது.

பொதுவாக அந்நிய செலாவணி என்பது ஒவ்வொ ரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு அம்சமாகும். ஏற்றுமதியை விட அதிகமாக இறக்குமதி செய்யும் போது அந்நிய செலாவணி கையிருப்பு குறையத் தொடங்குகிறது. அந்த வகையில் மேற்கோண்டு அந்நிய செலாவணி குறையாமல் இருக்க, நேபாளம் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியுள்ளது.

நேபாள அரசு சொகுசு கார்கள், அல்கஹோல், புகையிலை மற்றும் பல சொகுசு பொருட்கள் இறக்குமதிக்கு தடை விதித்துள்ளது. இது அந்நிய செலாவணி குறையாமல் இருக்க வழி வழிவகுக்கும். நேபாள அரசின் இந்த அறிவிப்பில் அவசரகால வாகனங்கள் தவிர மற்ற வாகனங்களை இறக்குமதி செய்ய முடியாது. மேலும் 600 டொலர்களுக்கு மேல் விலையுள்ள மொபைல் போன்கள் மற்றும்அல்க ஹோல், புகையிலைப் பொருட்கள், பெரி ய எஞ்சின் மோட்டார் சைக்கிள்கள் உ ள்ளிட்டவற்றை இறக்குமதி செய்ய முடியாது. இந்த தடை நடவடிக்கையானது ஜுலை நடுப்பகுதி வரையில் நடைமுறைக்கு வரும். இந்தத் தடையானது, இந்த ஆண்டின் இறுதியில் முடிவடையலாம்.

இதனுடன் பொம்மைகள், விளையாட்டுப் பொருட்கள், வைரங்கள் இறக்குமதி செய்வதையும் நேபாளம் தடை செய்கிறது. இதுபோன்ற கடுமையான நடவடிக்கைகள் இல்லாமல், கிட்டதட்ட எல்லாவற்றையும் இறக்குமதி செய்யத் தேவையான வெளிநாட்டு நாணய கையிருப்பு, இன்னும் சில மாதங்கள் மட்டுமே நீடிக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


நேபாளத்தில் வெளி நாட்டின் நாணயத்தின் முக்கிய ஆதாரங்கள் சுற்றுலா, வெளிநாட்டு ஊழியர்களிடமிருந்து பணம் அனுப்புதல் மற்றும் வெளிநாட்டு உதவிதான். கடந்த சில ஆண்டுகளாகவே கொரோனா காரணமாக அந்நாடு முடங்கியுள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகை சரிவு ஒவ்வொரு ஆண்டும் இலட்சக்கணக்கான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வழக்கமாக இமயமலை நாட்டிற்கு வருகை தருகிறார்கள்.



ஆனால் கொரோனா வைரஸ் தொற்று நோய்களின் போது சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் வீழ்ச்சி கண்டது. இது மேற்கொண்டு நேபாளத்திற்கு அழுத்தத்தினை கொடுத்தது. வேலை நேரம் குறைப்பு மேற்கொண்டு அதிகரித்து வரும் எண்ணெய் விலையானது நேபாளின் வெளிநாட்டு இருப்பில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இப்பிரச்சினையை கட்டுப்பாட்டுக்குள் வைக்க நேபாள அரசு ஐந்தரை நாட்களில் இருந்து, 5 நாட்களாக வேலை நாட்களை குறைத்துள்ளது. எனினும் தற்போது கொரோனாவின் தாக்கம் குறையத் தொடங்கியுள்ள நிலையில், சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை அதிகரிக்க தொடங்கியுள்ளது. மேலும் நாட்டில் இருந்த பணியாளர்கள் வெளிநாட்டிற்கு மீண்டும் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

# மருதமுனை CHILD FIRST ENGLISH COLLEGE 17வது பாடசாலை தின விழா, பரிசளிப்பு

மருதமுனை சைல்ட் பெஸ்ட் ஆங்கிலக் கல்லூரியின் (CHILD FIRST ENGLISH COLLEGE) 17 வது பாடசாலை தின விழாவும்,பரிசளிப்பும்,கலை நிகழ்வும் அண்மையில் மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை அஷ்ரப் ஆராதனை மண்டபத்தில் பாடசாலையின் தலைவரும், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழித் துறையின் தலைவருமான கலாநிதி ஏ.எம்.எம்.நவாஸ் தலைமையில் நடைபெற்றன.




இந்த விழாவில் விஷேட அதிதிகளாக இறக்காமம் பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க எம்.எஸ்.எம்.றஸ்ஸான், மகோயா பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளரும் மருதமுனையின் முதல் பெண் நிருவாக சேவை அதிகாரியுமான அய்மா நிஃமத்துல்லாஹ், கல்முனை மாநகர சபையின் கணக்காளர் கே.எம்.றியாஸ், கல்முனை வடக்கு வைத்திய அதிகாரி டொக்டர் ஜே.ஹய்லுல் மஸாஹித் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மேலும் சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையின் பல் வைத்திய நிபுணர் டொக்டர் எம். ஐ.எம்.நௌஷாட், தொழில் நுட்ப ஆலோசகர் எம்.ஜே.முகம்மட் சனோஜ், சி.ஐ.சி நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் ஏ.ஜி.ஹரீஸ், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் பி.எம்.எம்.எ.காதர், ஊடகவியலாளர் ஏ.எல்.எம். சினாஸ், இம்போட் மிரர் ஊடகவியலாளர் எம். வை.அமீர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கல்முனை நீதவான் நீதிமன்ற சமூதாய சீர்திருத்த உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.சப்றின் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார்.

இங்கு பாடசாலையின் தலைவரும், தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் ஆங்கில மொழித் துறையின் தலைவருமான கலாநிதி ஏ.எம்.எம்.நவாஸ் உரையாற்றுகையில் "மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முன்பள்ளிகள் மிகவும் முக்கியமானவையாகும்.முன்பள்ளிக் கல்வி என்பது அறிவு வளர்ச்சிக்கும்.ஆரோக்கிய வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றுகின்றது. குளிர் அறைக்குள் இருந்து கற்பதை விட திறந்த அறைகளுக்குள் இருந்து ஓடி ஆடி கற்பது நல்ல ஆறிவையும் சிறந்த ஆரோக்கியத்தையும் பெருக்குகின்றது.

கடந்த பதினேழு வருடங்களாக எமது பாடசாலைப் பயணம் தொடர்கின்றது. இந்தப் பயணத்தில் எமது பாடசாலையில் கற்ற மாணவர்களில் பெரும்பாலானோர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி கற்று வருகின்றனர். இனிவரும் நிகழ்வுகளில் இம்மாணவர்களை அதிதிகளாக அழைத்து முன்வரிசையில் அமரவைத்த அழகு பார்க்க இருக்கின்றோம்" எனத் தெரிவித்தார்.

இந்த விழாவில் விஷேட அதிதியாகக் கலந்து கொண்ட இறக்காமம் பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.றஸ்ஸான் உரையாற்றுகையில் "இளம் வயதில் எங்களுக்குக் கிடைக்காத இந்த சந்தர்ப்பம் எமது பிள்ளைகளுக்குக் கிடைப்பதையிட்டு நாங்கள் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம். எமது பிள்ளைகள் இந்த திறந்த மேடையில் கூச்சமின்றி ஆடுவதும், பாடுவதும், பேசுவதும் சிறப்பம்சமாகும். முன்பள்ளி கற்றல் என்பது மாணவர்களை வழிப்படுத்துகின்ற, வளப்படுத்துகின்ற துறையாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் பாடசாலை கடந்த பதினெழு வருடங்களாக நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியைப் பயிற்றுவித்து சிறந்த வழிகாட்டல்களை வழங்கியிருக்கின்றது. இந்தப் பிள்ளைகளைச் சிறப்பாகப் பயிற்றுவித்து வழிகாட்டிய ஆசிரியர்களைப் பாராட்ட வேண்டும். பல முன்பள்ளிப் பாடசாலைகள் இயங்குகின்ற போதிலும் மருதமுனை சைல்ட் பெஸ்ட் ஆங்கிலக் கல்லூரிக்கு நிகராக எந்தப் பாடசாலைகளையும் சொல்ல முடியாது" எனத் தெரிவித்தார்.

இங்கு மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட்டன. நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள் அனைவருக்கும் அதிதிகளால் பரிசுப் பொதிகளும்,நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

பி.எம்.எம்.ஏ.காதர்...
*(மருதமுனை தினகரன் நிருபர்)*

# சர்வோதய டெவலப்மென்ட் ஃபினான்ஸ் பிஎல்சி DIMO நிறுவனத்துடன் உடன்படிக்கை புதுப்பிப்பு

சர்வோதய டெவலப்மென்ட் ஃபினான்ஸ் பிஎல்சி நிறுவனம் ஏராளமான பிரத்தியேக சலுகைகளுடன், விவசாயத் துறைக்கு கவர்ச்சிகரமான குத்தகை வட்டி வீதங்கள் மற்றும் குறைந்த ஆரம்பக் கொடுப்பனவுத் தொகை போன்ற பிரத்தியேகமான வரப்பிரசாதங்களை வழங்குவதற்காக DIMO நிறுவனத்துடன் விசேட புரிந்துணர்வு உடன்படிக்கையை தொடர்ந்து 3 ஆவது ஆண்டிலும் முன்னெடுக்கும் வகையில் புதுப்பித்துள்ளது.




இந்தக் கூட்டாண்மையானது அனைத்து மஹிந்ரா (Mahindra) மற்றும் ஸ்வராஜ் (Swaraj) டிராக்டர்கள் மற்றும் லோவோல் (Lovol) மற்றும் கிளாஸ் (CLASS) ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்கள் மற்றும் விவசாய நோக்கங்களுக்காக இறக்குமதி செய்து தனது வாடிக்கையாளர்களுக்கு DIMO நிறுவனத்தால் விற்பனை செய்யப்படுகின்ற புதிய மற்றும் தற்போதைய வாடிக்கையாளர்களுக்கு விருப்பமான நிதிக் கூட்டாளராக சர்வோதய டெவலப்மென்ட் ஃபினான்ஸ் நிறுவனத்தை நிலைநிறுத்துகிறது.

குறிப்பிட்ட சில நிபந்தனைகளின் கீழ், சர்வோதய டெவலப்மென்ட் ஃபினான்ஸ் நிறுவனத்தால் விற்கப்படும் டிராக்டர்களுக்கு DIMO நிறுவனத்திடமிருந்து அவற்றை திரும்ப வாங்கும் சலுகை கிடைக்கப்பெறுகின்றமையானது இந்த கூட்டாண்மையால் ஏற்படுத்தப்பட்டுள்ள மற்றொரு கவர்ச்சிகரமான மற்றும் பெறுமதிமிக்க நன்மையாகும். இந்த கூட்டாண்மை ஆரம்பத்தில் 2019 இல் ஏற்படுத்தப்பட்டு, பின்னர் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட்டு வருவதுடன், தற்போது இந்த ஆண்டில் 3 ஆவது முறையாக நீடிக்கப்படுகிறது. கூட்டாண்மையை உத்தியோகபூர்வமாக உறுதி செய்யும் வகையில் இப்புரிந்துணர்வு உடன்படிக்கையானது சர்வோதய டெவலப்மென்ட் ஃபினான்ஸ் பிஎல்சி மற்றும் DIMO ஆகிய இரு நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு அண்மையில் இடம்பெற்ற ஒரு எளிமையான வைபவத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த இயந்திரங்களுக்கு முழுமையான 1 வருட கால உத்தரவாதம் கிடைக்கப் பெறுகிறது. இந்த நன்மைகளுக்கு மேலதிகமாக, வாடிக்கையாளர்களுக்கு இலவச விவசாய சாதனங்கள் தொகுதி (Farmer KIT) மற்றும் இலவச எண்ணெய் வடிகட்டிகள் (oil filter) மற்றும் மூன்று (03) பராமரிப்புச் சேவைகள் இலவசமாக வழங்கப்படும். மேலும், ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்கள் இலவச ஜிபிஎஸ் தொழில்நுட்ப (GPS) சாதனங்களை எந்த கூடுதல் கட்டணமும் இன்றி கொண்டிருக்கும். விவசாயத் துறைக்கு மேலும் உதவும் வகையில், வாடிக்கையாளர்களுக்கு சிறந்த அறிவூட்டல் மற்றும் அறிவைப் பகிர்ந்து கொள்ள வாடிக்கையாளர்களுடனான சந்திப்புக்கள் நடத்தப்படும்.

நாடளாவிய ரீதியில் பிரசன்னத்துடன், இலங்கையில் அபிவிருத்தி சார்ந்த கடன் வழங்கலில் முன்னணியில் திகழும் நிறுவனமாக இது உள்ளது. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் வளர்ந்து வரும் சந்தைகள் உட்பட விவசாயத் துறை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு அதன் பங்களிப்பு அளப்பரியது.

## இடைக்கால அரசை...

பார்த்துக் கொண்டிருக்காது நாடு எதிர்கொண்டுள்ள இந்த நிலைமைகளுக்கு அனைவரும் இணைந்து தீர்வு பெற்றுக் கொடுப்பது முக்கியமாகுமென்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு விளக்கமளிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இடைக்கால அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டால் அந்த அரசாங்கம் நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்புக்கூறும் அரசாங்கமாக அமைய வேண்டும். அந்த வகையில் நாட்டின் முழு ஆட்சியும் அந்த அரசாங்கத்தின் மூலமே முன்னெடுக்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அந்த வகையில் ஒரு தனிக் கட்சியோ கூட்டணியோ தனித்து எந்தத் தீர்மானங்களையும் எடுக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

நாடு முகம் கொடுத்துள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் இந்நாட்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றது.

அதேபோன்று எம்முடன் தற்போது இணைந்து செயற்பட்டு வரும் 11 கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுடனும் நாம் கடந்த இரண்டு தினங்களாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.

இடைக்கால அரசாங்கம் அமைப்பது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான அழைப்பு எமக்கு விடுக்கப்பட்டிருந்தது. அதன் சட்ட ரீதியான விடயங்கள் மற்றும் எவ்வாறு அதனை நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவே அந்த அழைப்பை ஜனாதிபதி எமக்கு விடுத்திருந்தார்.

நாம் அந்தப் பேச்சுவார்த்தைக்கு சென்றிருந்தோம்.அதன் போது அவர் இடைக்கால அரசாங்கம் தொடர்பில் தமது யோசனைகளை வெளியிட்டார்.

நாம் அந்த பேச்சுவார்த்தையின் போது யோசனைகளை முன்வைத்ததோடு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் இந்த இடைக்கால அரசாங்கத்திற்காக ஒன்றிணைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினோம்.

அதேபோன்று நாட்டின் தொழிற்சங்கங்கள், பல்வேறு அமைப்புகள் சிவில் அமைப்புக்கள், இலங்கை வர்த்தக சபை, வர்த்தகத் துறையினர் ஆகிய அனைத்து துறையினருமே நாட்டில் இடைக்கால அரசாங்கமொன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் இடைக்கால அரசாங்கம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலேயே நாம் இந்த பேச்சுவார்த்தையின்போது முக்கிய கவனம் செலுத்தினோம். இந்த விடயத்தில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டுக்கு வந்தால் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

அவ்வாறு இடைக்கால அரசாங்கம் ஒன்றை உருவாக்கி அதன் பின்னர் நாட்டின் ஆட்சியை முழுமையாக முன்னெடுப்பது இடைக்கால அரசாங்கமாகவே இருக்க வேண்டும். அதனை விடுத்து தனிக் கட்சியோ ஒரு கூட்டணியோ அதனை முன்னெடுத்துச் செல்ல முடியாது.

இடைக்கால அரசாங்கம் என்பது ஒரு நிலையான அரசாங்கமல்ல. தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு முன்னரான பயணமாக அது அமையும். அந்த அரசாங்கத்தை எந்தளவு காலம் முன்னெடுப்பது ஆறு மாதமா? அல்லது ஒரு வருடமா என்பது தொடர்பில் கட்சி தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்மானிக்கப்படும்.

நாட்டு மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர். அதே போன்று நாட்டில் தற்போது அத்தியாவசிய பொருட்கள், மருந்துப் பொருட்கள் போன்றவைகளுக்கான பெரும் தட்டுப்பாடு நெருக்கடி நிலவுகிறது. மக்கள் கையில் பணம் இல்லாமல் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர்.

அந்த வகையில் எவரது அரசாங்கம்? யார் தலைவர்? என்று பார்த்துக் கொண்டிருக்காது இந்த நிலைமைகளுக்கு அனைவரும் இணைந்து தீர்வு பெற்றுக் கொடுப்பது முக்கியமாகும்.

சர்வதேச நாணய நிதியம், ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட எமக்கு உதவி செய்யக்கூடிய நட்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி உதவிகளைப் பெற்று முதலில் மக்களின் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்கும்படி செய்து அவர்களது பட்டினி நிலைக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

அதை விடுத்து குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டு முன் செல்ல முடியாது. அதேவேளை தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான பின்புலத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டே நாம் இந்த பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றிய உள்ளோம். நாம் பதவிகளை பெற்றுக் கொள்ளவோ அல்லது அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுப்பதற்கோ அல்ல.

நிறைவேற்று சபை ஒன்று அமைக்கப்பட்டு அந்த சபையே அனைத்து ஆலோசனைகளையும் ஜனாதிபதிக்கு வழங்கும். ஜனாதிபதியும் அமைச்சரவையும் அந்த தேசிய சபை தெரிவிக்கும் வகையிலேயே செயற்பட வேண்டும்.

இவ்வாறு இடைக்கால அரசாங்கம் பற்றி நாம் சர்வதேச ரீதியில் பார்த்தால் எமது அரசாங்கத்தை போன்ற நிலை ஏற்பட்டு லெபனானில் மூன்றரை வருடத்திற்கு மேல் இடைக்கால அரசாங்கம் தொடர்ந்து செல்கிறது. அந்த இடைக்கால அரசாங்கத்திற்கு நாட்டை வழமைக்குக் கொண்டு வர இன்னும் முடியாமல் போயுள்ளது என்றார்.

## பொருளாதார பிரச்சினைக்கு ...

மனோ கணேசனுக்கு மிடையில் நடைபெற்ற தொலைபேசி உரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்ததாக மனோ கணேசன் எம்.பி தெரித்துள்ளார்.

இதுபற்றி மனோ கணேசன் எம்பி ஊடகங்களுக்கு கூறியுள்ளதாவது,

அரசியலமைப்பு தீர்வு என்பது பெரிய விஷயமல்ல. அதனால் பொருளாதார பிரச்சினைகள் தீரப் போவதில்லை. 20ஆவது திருத்தத்தை அகற்றி விட்டு 19ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதாக நான் கூறியபோது, அதற்கு அமைச்சரவையில் சம்மதம் பெற்றதும் உண்மைதான். ஆனால், அதற்கு மேல் என்ன நடந்ததென எனக்கு தெரியாது. ஒருவேளை அது அமைச்சரவை உபகுழுவில் இருக்கலாம். அதுபற்றி அவசரப்பட தேவையில்லை. அது வரும்போது வரட்டும். முதலில் மக்களின் பொருளாதார பிரச்சினைகளை நான் தீர்க்கிறேன். அப்போது இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் நின்று விடும்" என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, என்னிடம் தெரிவித்தார் என்றும் மனோ கணேசன்

கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் தொலைபேசியில். சபாநாயகர் மஹிந்த யாபாவிடம் பேசி விட்டு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை தொடர்பு கொண்டு, "20ஆவது திருத்தத்தை அகற்றி விட்டு, 19ஆவது திருத்தத்தை கொண்டு வருவதாக சொன்னீர்கள். அமைச்சரவையிலும் அனுமதி பெற்றதாகவும் சொன்னீர்கள். ஐக்கிய மக்கள் கூட்டணி சார்பிலும் நாம் அரசியலமைப்பு திருத்த வரைபை வழங்கியுள்ளோம்.

அதில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை முழுமையாக அகற்றுவது பற்றி கூறப்பட்டுள்ளது. எனினும் அரசாங்கத்தின் வரைபுக்கே முதலிடம் கிடைக்கும். 20ஆவது திருத்தத்தை அகற்றும் எல்லா முயற்சிகளுக்கும் நாம் ஆதரவளிப்போம். முதற்கட்டமாக, 20ஐ அகற்றிவிட்டு, 19ஐ கொண்டு வருவதையும் நாம் ஆதரிப்போம். ஆகவே நீங்கள் எப்போது உங்கள் சட்ட வரைபை பாராளுமன்றத்துக்கு கொண்டு வருகிறீர்கள்? இது பற்றி சற்றுமுன் சபாநாயகர் மஹிந்த யாபாவிடம் பேசினேன். உங்கள் சட்ட வரைபு எப்போது சபைக்கு வரும் என்பது பற்றி, அவர் தனக்கு எதுவுமே தெரியாது என்கிறார்", என்று கேட்டேன்.

அதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, "இன்று நாட்டில் நிலவுவது பொருளாதார பிரச்சினைதான். எமக்கு நட்பு நாடுகள் உதவும். பிரச்சினைகளுக்கு நாம் பொருளாதார தீர்வு வழங்குவோம். அரசியலமைப்பு தீர்வு என்பது பெரிய விஷயமல்ல. அதனால் பொருளாதார பிரச்சினைகள் தீரப்போவதில்லை. 20ஆவது திருத்தத்தை அகற்றி விட்டு 19ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதாக நான் சொன்னதும், அதற்கு அமைச்சரவையில் சம்மதம் பெற்றதும் உண்மைதான். ஆனால், அதற்கு மேல் அதற்கு என்ன நடந்தது என எனக்கு தெரியாது. ஒருவேளை அது அமைச்சரவை உபகுழுவில் இருக்கலாம். அதுபற்றி அவசரப்பட தேவையில்லை. அது சாவகாசமாக வரும்போது வரட்டும். முதலில் மக்களின் பொருளாதார பிரச்சினைகளை நான் தீர்க்கிறேன்." என்று கூறினார்.

"அரசியலமைப்பு திருத்தம் மூலம் நாட்டில் உடனடியாக இறுதி தீர்வு வராது என்பது எனக்கு தெரியும். ஆனால் நாட்டில் ஸ்திரத்தன்மை வருமே. அது தீர்வை கொண்டு வரும். இன்று மக்கள் நாடு முழுக்க போராடுகிறார்கள். அவதிபடுகிறார்கள். இது உங்களுக்கு பிரச்சினை இல்லையா" என அவரிடம் கேட்டேன்.

"கவலை வேண்டாம்..! மக்களின் பொருளாதார பிரச்சினைகள் தீர்ந்து விட்டால், இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் ஓய்ந்து போய் விடும். அதற்குதான் பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க போகிறேன். அப்புறம் பாருங்கள், இந்த போராட்டங்கள் எல்லாமே முடிவுக்கு வந்து விடும்." என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறினார் என்றும் மனோ எம்.பி கூறினார்.

20ம் திருத்தத்தை அகற்றி விட்டு 19ம் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதாகவும், அதற்கு அமைச்சரவையில் சம்மதம் பெற்றதாகவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ச சொல்லி இருந்தாலும், இதற்கு அவர் முன்னுரிமை அளிக்கவில்லை என இப்போது தெரிகிறது. நாட்டில் மக்கள் போராடுவது, உணவு, மருந்து, மின்சாரம், பெட்ரோல், எரிவாயு, உரம் போன்ற பொருளாதார தேவைகளுக்காத்தான் என அவர் உறுதியாக நம்புகிறார். ஆகவே அவற்றுக்கு தீர்வு கண்டால் இந்த போராட்டங்கள் எல்லாம் முடிவுக்கு வந்து விடும் என அவர் நம்புகிறார். இதற்காக அவருக்கு நட்பு நாடுகள் உதவும் எனவும் அவர் நம்புகிறார்.

ராஜபக்ச குடும்பத்தார் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல், வீணடிப்பு, தவறான நிதிக்கொள்கை போன்ற விடயங்கள் பற்றி அவர் எதுவும் கூறாவிட்டாலும்கூட, இவைபற்றிய போராட்டங்களையும் கூட அவர் முக்கியமாக கருதவில்லை என தெரிகிறது.

இதுபற்றி ஐக்கிய மக்கள் கூட்டணி தலைவர் சஜித் பிரேமதாசவிடம் பேசினேன். ஏனைய எதிரணி கட்சி தலைவர்களிடமும் பேசவுள்ளேன். அனைத்து எதிரணி கட்சிகளும் தங்கள் செயற்பாடுகளை கூட்டிணைக்க வேண்டும் என விரும்புகிறேன் என மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.

## அலரிமாளிகைக்கு அருகில்...

புத்திஜீவிகள், பொது மக்களென பலர் கலந்து கொண்டு பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலக வேண்டுமென்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

இங்குள்ள போராட்டக்காரர்களுக்கு எதிராக, இப் பகுதியின் நடைப்பாதைகளில் பொலிஸார் பஸ்கள் உள்ளிட்ட பொலிஸ் வாகனங்களையும் நிறுத்தியுள்ளனர்.

இவ்வாறான சூழலில் நேற்றுக் காலை இப் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள வாகனங்களை அகற்றுவதற்கு கொள்ளுபிட்டி பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். எனினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதற்கு எதிர்ப்பு வெளியிட்டனர்.

கொள்ளுபிட்டி பொலிஸ் நிலையத்துக்கு கடந்த இரு தினங்களுக்கு முன்னர் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர், இப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களை அப்புறுப்படுத்துமாறு கோரியிருந்தனர். எனினும் அங்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ள வாகனங்களின் உரிமையாளர்கள் யார் என்பது தெரியாததால் அதனை அப்புறப்படுத்த முடியாதென பொலிஸார் தெரிவித்திருந்ததாக போராட்டக்காரர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்தநிலையிலேயே நேற்று இப் பகுதிக்கு சென்ற பொலிஸார் வாகனங்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்திருந்த போது, வாகனங்களின் உரிமையாளர்கள் இத் தகவல்களை பகிரங்கப்படுத்துமாறு போராட்டக்காரர்கள் கோரியுள்ளனர்.

இதன்காரணமாக பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது, இப்பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்ட தன்மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டதாக ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார். தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் நபர் அம்பியூலன்ஸின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன.

எனினும், பொலிஸார் இப் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதை தாங்கள் யாரும் காணவில்லையென அங்குள்ள சிலர் தெரிவித்தனர்.

## தமிழக சட்ட சபையில் ...

உயிர்காக்கும் மருந்துகள் ஆகியவற்றை அனுப்பி வைக்க தயாராக உள்ளது. இதற்கு மத்திய அரசு தேவையான அனுமதி வழங்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு ஏற்கெனவே மாநில அரசு கடிதம் எழுதியுள்ளது. எனினும் இதுகுறித்து மத்திய அரசிடமிருந்து எவ்விதமான தெளிவான பதிலும் இதுவரை பெறப்படவில்லை.

தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று இலங்கையில் கடும் இன்னலுக்கு உள்ளாகி இருக்கும் மக்களுக்கு உதவும் வகையில் உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகளை தமிழ்நாட்டில் இருந்து உடனடியாக அனுப்பி வைக்கத் தேவையான ஏற்பாடுகளை செய்து உரிய அனுமதி வழங்க வேண்டும் என சட்டசபையில் தனித் தீர்மானத்தை முதல்வர் ஸ்டாலின் தாக்கல் செய்தார்.

அதை தொடர்ந்து பேசிய அவர், மனிதாபிமான அடிப்படையில் கை கொடுக்க வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு. மக்கள் படக்கூடிய துன்பங்கள் துயரங்கள் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. மண்ணெண்ணெய் வாங்க 6 மணி நேரம் காத்திருக்கும் சூழல் அங்கு உள்ளது. இலங்கை முழுவதும் மின்சார தட்டுப்பாடு நிலவுகிறது.

பஸ்கள், ரயில்கள் போக்குவரத்து சேவைகள் குறைக்கப்பட்டுள்ளள. தேயிலை தோட்டங்களில் பணிப்புரியும் தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உயிர் காக்கும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. பால் விலை, பால் பவுடர், உணவுப்பொருட்கள் விலை அனைத்தும் 100 சத வீதம் உயர்ந்துள்ளதால் பச்சிளம் குழந்தைகள் கூட பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

## முன்னாள் அமைச்சர்..

செய்யப்பட்டிருந்த வழக்கிலிருந்து அவர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான மாஜிஸ்திரேட் நீதிமன்ற நீதவான் நந்தன அமரசிங்க நேற்று அதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் பௌசிக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த குற்றப்பத்திரிகையை வாபஸ் பெற்றுக் கொள்வதற்கு அந்த ஆணைக்குழு நீதிமன்றத்திடம் விடுத்திருந்த வேண்டுகோளை கவனத்திற்கொண்ட நீதவான் நேற்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் பௌசி அனர்த்த முகாமைத்துவ அமைச்சராக பதவி வகித்த காலத்தில் நெதர்லாந்து அரசாங்கத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த 2 கோடி ரூபா பெறுமதியான சொகுசு வாகனத்தை தமது தனிப்பட்ட பாவனைக்கு உபயோகித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேற்படி ஆணைக்குழுவினால் குறித்து வழக்கு தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## மோதலுக்குப் பின்னரான நல்லிணக்கம்... (03 ஆம் பக்கத் தொடர்)

தீர்வு காண்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் குறிப்பிட்டார். அண்மையில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பான நிபுணர்கள் குழுவின் அறிக்கையை சுட்டிக்காட்டிய அவர், விரிவான ஆலோசனைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்தார்.

சிவில் சமூக அமைப்புக்களுடனான கூட்டுறவை வலுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மற்றும் தேசிய தன்னார்வத் தொண்டு நிறுவன செயலகத்தை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கான சமீபத்திய தீர்மானம் ஆகியன குறித்து குறிப்பிடுகையில்,

அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களுடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொள்ளும் வழக்கமான உரையாடல் மற்றும் அவர்களின் பணிகளுக்கு ஆதரவளிப்பதற்கான அர்ப்பணிப்பு குறித்து அமைச்சர் பீரிஸ் தூதுவர்களுக்கு விளக்கினார். கடந்த ஆணைக்குழுக்களின் கண்டறிதல்கள் மற்றும் முன்னோக்கிச் செல்லும் வழிகளை மதிப்பிடுவதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இரண்டாவது இடைக்கால அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டார்.

நாட்டில் நிலவும் நிலைமை மற்றும் அரசியல் மற்றும் பொருளாதார சவால்களை அரசியல் சாசனத்துக்கமைவாக எதிர்கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர் விளக்கமளித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## அருகிலுள்ள பாடசாலைகளில்...

அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பு கிடைக்குமாயின், தரவுகளை மதிப்பாய்வு செய்து, இந்த நடவடிக்கையை முன்னெடுக்க முடியுமென கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

## மின் கட்டணத் திருத்தம் தொடர்பில்...

அரசாங்கத்தின் கொள்கையை அண்மையில் கேட்டறிந்ததாக ஆணைக்குழு தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நீர் மின்சார பற்றாக்குறையால் அதிக எரிபொருளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் ஒரு அலகு மின்சாரத்துக்கான செலவு அதிகரித்துள்ளது. இலங்கை மின்சார சபை ஒரு அலகு மின்சாரத்துக்கு 53 ரூபாவை செலவழித்த போதிலும், நுகர்வோர் ஒருவருக்கு 16 ரூபாவே அறவிடப்படுகின்றது.

எவ்வாறாயினும், கடந்த 08 வருடங்களாக மின்சார கட்டணம் அதிகரிக்கப்படவில்லையென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

## IMF வேலைத்திட்டம் தொடர்பில் ...

கண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக, கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்த வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன், ஆரம்பநிலை அதாவது, பணிக்குழாம் மட்டத்திலான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்கு முன்னர், இலங்கை அத்தியாவசியமாக நிறைவேற்ற வேண்டியவையென எதிர்பார்க்கப்படும் செயற்பாட்டை பூரணப்படுத்த வேண்டும்.

அதன்பின்னரே, இலங்கையினால் இடைநிறுத்தப்பட்ட வெளிநாட்டுக் கடன் மீள செலுத்தல் செயற்பாடுகளை மறுசீரமைக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க முடியுமென மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

## எரிவாயு நெருக்கடி மே...

தலையீட்டுடன் மேலும் பல விநியோகஸ்தர்களை தெரிவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உலக வங்கி எரிவாயு கொள்வனவுக்கு 90 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கும். லிற்றோ மற்றும் லாஃப்ஸ் நிறுவனங்களின் சந்தை அளவுக்கேற்ப பணம் விநியோகிக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

## ஆர்ப்பாட்டங்களின் போது...

மதிக்கின்ற அனைவரையும் உள்ளடக்கிய அமைதியான வழிமுறைகளை பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

நாங்கள் எங்கள் மனித உரிமை கரிசனைகள் குறித்து இலங்கையுடன் தொடர்ச்சியாக பேச்சுசுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம். மனித உரிமைகளில் முன்னேற்றம் காணவேண்டியது குறித்தும் இலங்கை மக்களுக்கு நீதி பொறுப்புக்கூறலை வழங்க வேண்டியது குறித்தும் அஹமட் பிரபு, இலங்கை ஜனாதிபதி வெளிவிவகார அமைச்சரை சந்தித்தவேளை தெரிவித்திருந்தாரென பிரிட்டனின் பாராளுமன்ற பொதுநலவாய அபிவிருத்தி அலுவலகத்தின் இராஜாங்க அமைச்சர் விக்கி போர்ட் பிரிட்டன் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தென்னாசியாவுக்கான அமைச்சர் தாரிக் அஹமட் அமைதியாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டுமென தெரிவித்துள்ளாரெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொது விடுமுறை...

விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச தொழிலாளர் தினம் இந்த ஆண்டு ஞாயிற்றுக்கிழமை வருவதால், அடுத்த நாளை அரசு விடுமுறையாக அறிவிக்க அரசு முடிவு செய்துள்ளது.

## நகரங்களுக்கும் அத்தியாவசிய...

வழங்க முடிவு செய்துள்ளதாக லிற்றோ நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தினமும் 80,000 சிலிண்டர்கள் வழங்கப்பட்டு வரும் அதேவேளை தற்போது இந்த எண்ணிக்கை 30,000 ஆக குறைந்துள்ளது. நாட்டின் நிலைமையை கருத்தில் கொண்டு, சமையல் எரிவாயு தேவையை பூர்த்தி செய்ய மாதமொன்றுக்கு 30 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக அவர் தெரிவித்ததுடன், நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

## நியூஸிலாந்திலிருந்து...

இணங்கியுள்ளது. இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் Michael Appleton, இவ்வாறு இணக்கம் தெரிவித்துள்ளதாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகருடனான கலந்துரையாடலின் போதே இதற்கு இணக்கம் தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மே தினத்தன்று காலி முகத்திடல்...

மே தினத்தன்று தமது கட்சியினரை காலிமுகத்திடல் போராட்ட களத்துக்கு செல்லுமாறு அறிவித்திருந்தார்.

இதனையடுத்தே போராட்ட களத்திலுள்ள இளைஞர்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

கொழும்பு காலிமுகத்திடலில் இளைஞர், யுவதிகள் கடந்த 21 நாட்களாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தை பதவி விலகுமாறு கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எந்த அரசியல் கட்சிகளின் ஆதரவுமின்றி இளைஞர்கள் தன்னெழுச்சியாக இந்த போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

## தனமல்வில வார...

தாக்கப்பட்ட நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மரணமானவர் கித்துல்கோட்டை பிரதேசத்தை சேர்ந்த 44 வயதுடைய ஒருவரென அடையாளம் காணப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளை தனமல்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 2021ம் ஆண்டுக்குரிய...

ஊடக சந்திப்பில் இம்முறை இந்தப் பரீட்சைக்கு நான்கு இலட்சத்து 05 ஆயிரத்து 123 பாடசாலை விண்ணப்பதாரிகளும், 01 இலட்சத்து 10 ஆயிரத்து 367 தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் விண்ணப்பத்திருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்தார்.

எதிர்வரும் காலத்தில் பாடசாலை கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. 03 தவணைகளையும் உள்ளடக்கிய வகையில் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இவ்வருடம் ஒக்டோபர் 16ஆம் திகதி 05ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறவுள்ளது. ஒக்டோபர்17ஆம்திகதியிலிருந்துநவம்பர் 12ஆம் திகதி வரை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையையும் நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் கூறினார்.


## உலகத் திருக்குறள்... (03 ஆம் பக்கத் தொடர்)

திருக்குறளை உலக பொது மறை நூலாக அறிவிக்க யுனெஸ்கோவை வலியுறுத்துவது, தேசிய நூலாக அறிவிக்க கோரி மத்திய அரசை வலியுறுத்துவது, மாநாட்டுக்கு உதவிய மைசூர் தமிழ் சங்கம் உட்பட தமிழ் அமைப்புகளுக்கு நன்றி தெரிவிப்பது, ஐந்தாவது மாநாடு 2023 ஜூனில் பாரிசில் நடத்துவது, லண்டன் தமிழ் சங்கத்துக்கு திருவள்ளுவர் சிலை வழங்குவது, உலக பொதுமறையாக அறிவிப்பதற்கு யுனெஸ்கோவிற்கு ஒரு கோடி ரூபாய் அறிவித்த தமிழக அரசுக்கு நன்றி தெரிவிப்பதென ஆறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ்த்தாய் அறக்கட்டளை பொதுச் செயலர் உடையார்கோவில் குணா நன்றியுரையுடன் மாநாடு முடிவுற்றது. பல்வேறு பகுதிகளிலிருந்து திரளான தமிழ் சான்றோர், அறிஞர்கள், புலவர்கள், கவிஞர்கள் மாநாட்டில் பங்கேற்றனர்.

இம்மாநாட்டினை திட்டிவனம் மயிலம் சீர்வளர்சீர் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியில் கல்லூரி, திருச்செங்கோடு விவேகானந்தா கலை அறிவியல் மகளிர் கல்லூரி, சென்னை சைதாபேட்டை அன்னை வேளாங்கண்ணி மகளிர் கல்லூரி, குவைத் தமிழ் இஸ்லாமியர் சங்கம், மைசூர் தமிழ் சங்கம், தஞ்சாவூர் தமிழ்த் தாய் அறக்கட்டளை என்பன இணைந்து ஏற்பாடுசெய்திருந்தன.

# இலக்கியச் சாளரம் கொண்டு காதல் வாழ்வை செதுக்கும் குறுந்தொகை



காதல் உயிரும் உடலும் போன்றது என்பது நிஜமாயினும் இல்லை இல்லை அது சுரப்பிகளின் விளையாட்டுதான் என்பது உண்மையாயினும் காதலிப்பதும் காதலிக்கப்படுவதும் பெரும்பான்மை மனிதர்களின் பேரார்வம் நிறைந்த விருப்பமே!

இலக்கியச் சாளரம் கொண்டு காதல் வாழ்வை நோக்கும்போது மனம் எனும் மாயக்கிடங்கிலிருந்து உற்பத்தியாகும் காதல் எனும் ஊற்று,பேரன்பு எனும் பேராழியாய் மனிதர்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதை உணர முடியும்.

இலக்கியத்தில் குறுந்தொகை காதலை ரசனை மிகுந்ததாக நமக்கு பல்வேறு விதமாக தருகின்றது.

அந்த வகையில் பிரிவால் வருந்தும் காதலியைத் தோழி தேற்றும் முறையை குறுந்தொகையானது யானைகளின் காதலோடு ஒப்பிட்டு அழகாக விளக்குகிறது.

"நசைபெரி துடையர் நல்கலு நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழியவர் சென்ற வாறே."

"பயணம் சென்ற எனது காதலர் என்னை மறந்து போய் விட்டால் நான் என்னடி செய்வேன்?" என்கிறாள் தலைவி. அதற்கு தோழி,"வருந்தாதே. அவர் உன்னை ஒருநாளும் மறக்க மாட்டார். அப்படியே மறந்தாலும் அவர் சென்ற வழி இருக்கிறதே அது அவருக்கு உனது நினைவினை உண்டு பண்ணும்" என்கிறாள்.

"அப்படியா! அது எப்படி ?" என்கிறாள் தலைவி.

"தலைவன் சென்ற அந்த வழியிலே யானைகள் ஆணும் பெண்ணுமாக ஏராளமாகத் திரியும்.வெயில் தாங்க முடியாது நீர் வேட்கை கொண்டு திரியும் பெண் யானையின் தாகம் தீர்க்க வேண்டி ஆண் யானை மரப் பட்டைகளைப் பிளந்து தன் இணையான பெண் யானைக்கு அன்புடனும் காதலுடனும் ஊட்டி விடும். அதைக் கண்டதும் தலைவனுக்கு உன் நினைவு வந்துவிடும்.

விரைவில் வருவார் வருந்தாதே!

என யானைகளின் காதலுடன் மாந்தரின் காதலையும் இணைத்துப் பாடியுள்ளார் பாலை பாடிய பெருங்கடுங்கோ.

காதல் மிகுந்த தலைவன் தலைவியின் பிரிவுத் துன்பத்தை தனது அற்புதமான உவமை மூலமாக குறுந்தொகையில் நம் கண்முன் நிறுத்துகிறார் சிறைக்குடி ஆந்தையார்.

அகன் சரவணன்...

**"பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன**
**நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்**
**பிரிவரி தாகிய தண்டாக் காமமொடு**
**உடனுயிர் போகுக தில்ல கடனறிந்**
**திருவேம் ஆகிய வுலகத்**
**தொருவே மாகிய புன்மை நாம் உயற்கே."**

தலைவியின் காதலை அவள் பெற்றோர் அறிந்ததால் அவளை வெளியே சென்று தலைவனைச் சந்திக்க விடாமல் காவல் போட்டனர். அந்தக் காவல் மிகுதியில் தலைவனைச் சந்திக்க இயலாத ஆற்றாமையில் வருந்திய தலைவி தன் துன்பத்தைத் தோழியிடம் இவ்வாறு தெரிவிக்கிறாள்.

நீர்வாழ்ப்பறவை அன்றில் ஆணும் பெண்ணுமாக ஒன்றையொன்று பிரியாமல் வாழ்வன. அவை குளத்தில் இணைந்து செல்லும்போது, அவற்றின் இடையே பூ ஒன்று இடைப்பட்டு தடையை ஏற்படுத்தினாலும் அந்த ஒரு நொடி பிரிவை ஓர் ஆண்டு கால அளவிலான பிரிவாக எண்ணி வருந்துமாம்.அந்தப் பறவைகள் போல ஓருயிர் ஈருடல்களாக நாங்கள் வாழ்கிறோம்.

தலைவன் பிரிந்தபோது ஓருயிர் ஒருடலில் வாழும் இழிவு ஏற்படும். அதற்கு தலைவன் பிரிந்தவுடன் என்னுயிரும் போய்விடுவது மேலானது என்கிறாள் தலைவி.

இப்பாடல் வழி அன்றில் என்னும் பறவைகள் தம்முள் அன்பு நிறைந்த வாழ்க்கை வாழ்வன என்றும் அவை தம்முள் பூ இடைப்படினும் அந்தப் பிரிவை ஓர் ஆண்டு காலப் பிரிவாகக் கருதி வருந்தும் என்னும் செய்தியும் குறிப்பிடப்படுகிறது.

அன்றில் பறவைகள் பூ இடைப்படும் ஒரு நொடி பிரிவை ஓராண்டு பிரிவு போன்று வருத்தத்துடன் தாங்கிக்கொள்ளும்.

ஆனால் என்னால் தலைவனின் பிரிவை ஒரு நொடிகூடி தாங்க முடியாது. அதற்கு அவன் பிரிந்தவுடனேயே என் உயிர் போய்விடுவது மேலானது என்கிறாள் தலைவி.

**(மிகுதி அடுத்தவாரம்)**

## அவள் பேரழகு



அழகோ அழகு
அவள் பேரழகு!

அழகின் மறுஉருவம்
அன்பின் திருஉருவம்!

வானிலவும் ஏங்கி தவிக்குது
வானவில்லும் வந்து வியக்குது!

உச்சி முதல் பாதம்வரை ஓரலகு
உள்ளமோ பேரழகு!

மெச்சி அவள் நிழல் தொட்டே
மெய் சிலிர்த்து போனேன்

மயில் ஆடும் கண்கள்
மனமோ மார்கழி திங்கள்!

குயிலிசை பேச்சு
குணமோ உயிர் மூச்சு!

நெற்றி வகிடில் நேர்மையும்
நெற்றி பொட்டில் பெண்மையும்!

காப்பிய கவிஞர்கள் காதலித்து
கவிதை படைத்த நாயகி!

கலைகளின் அரசி
காவியத்தலைவி!

காத்திருப்பாள் கனவோடு
காதலன் இவன் நினைவோடு!

புன்னகை மொழி பேசிடும்
பூக்களின் மணம் வீசிடும்!

இயற்கை எழில் கொஞ்சிடும்
இனியவள் என்னவள்!

அழகோ அழகு
அவளோ பேரழகு!

மொழி

**கலைக் கதம்பம்**

சைத்திரியன்

**"தமிழர்களின் பாரம்பரிய கலாச்சாரத்தையும் ஈழத்தின் பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாப்பது காலத்தின் கட்டாயம்"**

# சிட்னியில் 'மாட்டுவண்டிச் சவாரி'

ஈழத் தமிழர்களது கலாசார மரபில் மாட்டு வண்டிச் சவாரி முக்கிய இடம் பெற்றுள்ளமையை அண்மைக்கால நிகழ்வுகள் வரை தொடர்ந்து நம்மால் அறிய முடிகிறது என மாட்டுவண்டிச் சவாரி நூல் மீதான வெளியீட்டுரையில் ஐங்கரன் விக்கினேஸ்வரா குறிப்பிட்டார்.

ஏறு தழுவுதல் தமிழ் நாட்டின் வீர விளையாட்டு என்றால் ஈழத் தமிழர்களின் வீர விளையாட்டாக மாட்டு வண்டிச் சவாரி அமைகிறது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது. முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு. திருகோணமலை ஆகிய பகுதிகளிலும் மாட்டு வண்டிச் சவாரி காலம் காலமாக தொடர்வதை நாம் அவதானிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைப் பேராசிரியர் பாலசுகுமார் எழுதிய "ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்" எனும் மேற்படி நூல்வெளியீடு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல வைத்தியர் டாக்டர் ப.விக்கினேஸ்வராவின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வாக சிட்னி முருகன் கோயில் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நூலினை ராஜன் விக்கினேஸ்வரா வெளியிட்டு வைக்க முதற்பிரதியை சிட்னி பிரபல டாக்டர் மனோமோகன் பெற்றுக் கொண்டார்.

ஈழத்தில் தமிழர் மரபுரிமைகள் பற்றியதான சிந்தனையும் செயல்பாடுகளும் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள சூழ் நிலையில் கல்வியாளர்களும் வரலாற்று ஆய்வாளர்களும் மாட்டுவண்டிச் சவாரி , ஏறு தழுவுதல் போன்ற நம் பாரம்பரிய விடயங்களில் அக்கறை செலுத்துவதை காணக்கூடியதாகவுள்ளது என நூல் வெளியீட்டு நிகழ்வில் சிரேஸ்டபேச்சாளர் தனபாலசிங்கம்தெரிவித்தார்.

அவர் தமது ஆய்வுரையில், தமிழர் நாகரிக வரலாற்றில் மாடு மிக முக்கிய பங்கு வகித்து வந்துள்ளமையை வரலாற்று ஏடுகளில் காண முடியும். ஏறு தழுவுதல் எனும் தமிழரின் வீர விளையாட்டு இன்று வரை பல்வேறு வடிவங்களில் தொடர்வதை நாம் காணலாம்.


எருதை அடக்கி இளைஞர்கள் தம் வீரத்தை நிரூபித்து திருமணம் செய்தமையை சங்க இலக்கியப் பாடல்களில் காணலாம்.

காளை மாடுகளை அடக்கி வெற்றி கொள்ளல் தமிழர் பண்பாட்டில் தொடர்ந்து வருகின்ற ஒரு வீர விளையாட்டு. தமிழ் நாட்டில் அது பெரும் கொண்டாட்டமாக இன்று வரை தொடர்வதை காணலாம்.









காளை மாடுகள் தமிழ் மரபில் முக்கிய இடம் வகித்தமையும் ஈழத் தமிழர்களது பண்பாட்டு வெளியில் காளை மாட்டுச் சவாரி முக்கிய இடம் வகித்தமையையும் அது அண்மைக் காலம் வரை தொடர்வதையும் நாம் காணலாம் என்றும் குறிப்பிட்டார். ஈழத்தமிழர்களின் பாரம்பரிய கலாச்சாரத்தையும்,ஈழத்தின் பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாப்பது தாயக மக்களின் கடமை மாத்திரமன்றி, புலம்பெயர் தமிழர்களின் பெருங் கடமையும் காலத்தின் கட்டாயமுமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.. இந்த நூல் வெளிவருவதற்கு காரணம் வைத்தியர் விக்கினேஸ்வரா தான். அன்னார் வண்டிச் சவாரி மரபில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக இருந்தார் என்பதை சுன்னாகம் பிரதேச சவாரிப் பிரியர்கள் தந்த தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

தகவல், படங்கள், உதவி
மைக்கல் கொலின்...

"பவள இதழ்களில் ஒளிபொருந்திய வாளாக மின்னும் பன்னைகை"
"மைதீட்டி எழுதப்படாத நீண்ட செங்கயல் விழிகள்"

# சீத்தலை சாத்தனாரின் உவமையில் எழிலரசி மணிமேகலை

**(கடந்த வாரத் தொடர்)**

"திருமணம் ஆகும்வரை பெண்ணுக்குக் கண்ணித்தன்மை காவல் — திருமணத்திற்குப்பின் கணவன் காவல் — கணவன் இறந்தால் மரணமே காவலாகவும்கொண்டு வாழ மணிமேகலை உயர்குலப் பத்தினி பெண்கள் பிறந்த குலத்திலா பிறந்திருக்கிறாள்? கழுதை. கணிகையர் குலத்தில் பிறந்தவள் அவள்." என்றாள்.

உதயகுமாரன் மனதில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. பள்ளியிலிருந்து துள்ளி எழுந்தான்.

"யாரங்கே! சித்திராபதிக்கு வேண்டிய வெகுமதியை அளித்து, உரியமுறையில் தேரில் அவள் இல்லத்தில் கொண்டுவிடுங்கள்" என்று தனது அந்தரங்க அறைக்குள் புகுந்தான்.

அலங்காரமாக அணி புனைந்தான். குழற்கற்றைகளைச் சுருட்டிவிட்டுக்கொண்டான். கண்ணுக்கு கரிய மைதீட்டிக்கொண்டான். நெற்றியில் சிந்தூரம் இட்டுக்கொண்டான். மெல்லிய ஆடைகளை அணிந்துகொண்டான். வாசனைத் தைலங்களை உடலெங்கும் பூசிக்கொண்டான். மார்பில் சந்தனமும் புனுகும் பூசிக்கொண்டான்.

"என் அழகு ராஜா! கண்ணேறு பட்டுவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். மணிமேகலை உங்களுக்குதான்!" என்று சித்திராபதி தனது விரல்களைத் தலையில் நெறியும்வண்ணம் சொடுக்கிக்கொண்டாள்.

உதயகுமாரன் பொற்றேர் ஒன்றில் ஏறியமர்ந்து விரைவாகக் குதிரைகளைச் செலுத்தி உலக அறவி நோக்கிச் சென்றான் பசிப்பிணியுடன் வரிசையில் நின்ற வறியவர்களுக்கு மணிமேகலை உணவளித்துக்கொண்டிருந்தது சுடுகாட்டில் காவல் இருக்கும் பெண்தெய்வம் பேய்களுக்கு உணவு அளிக்கும் காட்சியை உதயகுமாரனுக்கு நினைவுபடுத்தியது.

மணிமேகலை அவனைத் தொலைவில் கண்டுவிட்டாள். உதயணனின் தோற்றமும் இளமையும் பொலிவும் அவளிடம் சிறிது சலனத்தை ஏற்படுத்தின. அவளும் யௌவனம் நிரம்பிய சிறு பெண்தானே? பருவத்தில் எழும் ஆசைகளை உருவத்தை மறைக்கும் துறவியின் உடுப்பால் மறைக்க முடியுமா என்ன? ப்ச் என்ன இது இப்படி ஒரு சலனம். அவன் என் முற்பிறப்பின் கணவன் என்ற நினைவு என்னுள் எழும் காம உணர்வுகளுக்கு ஒரு சமாதானம் மட்டுமா? அவன் அருகில் வந்து என் வளைந்த இடுப்பைப் பற்றி என் வளைக்கரம் பிடித்தால் அவனை முந்தைய பிறவியின் கணவன் என்ற முறைமையில் தடுக்காமல் இடம்கொடுத்துவிடுவேனோ?

மணிமேகலையின் நெஞ்சம் பதறியது. இனி வருந்துவதற்கோ அழுவதற்கோ நேரமில்லை. அவன் வருவதற்குள் ஏதாவது செய்தாகவேண்டும்.

மன்னர்மகன் மன்றம் ஏறிவந்தான். அவனுக்கு உரிய ஆசனம் அளிக்கப்பட்டது. அனைவர் அறியும் வண்ணம் இவன் தன்னைத் தொடர்வது யார் செய்த பாவம்?

மணிமேகலை தொண்டையைக் கனைத்துக் கொண்டாள்.

"மன்னா நல்ல தர்மசிந்தனை நிரம்பிய மொழிகளைக் கேட்டுக்கேட்டு உனது செவிகள் இரண்டும் துளைக்கப்பட்டிருந்தால் நான் இதனை உங்களுக்குக் கூறுவேன். இந்த உடல் என்ற கலமானது பிறத்தல், வளர்தல், மூப்பு, பிணி போன்ற பலவற்றிற்கு ஆளானது. இதனை நான் நன்கு அறிந்ததால்தான் என்னால் இயன்ற தருமத்தைச் செய்துவருகிறேன். ஒரு பெரும்போரில் எதிரிகளை அழிக்கும் பொருட்டு முன்னேறிச்செல்லும் ஆண்யானையைப் போன்ற கம்பீரமான ஆண்களுக்குப் பெண்கள் என்ன புத்திமதி கூற இயலும்? சொல்லுங்கள். பார்த்து நடந்துகொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு அந்த இடத்தைவிட்டு அகன்றாள்.

கூர்ச்சரர்கள் பாணியில் எழுப்பப்பட்டிருந்த சம்பாதிகோவிலுக்குள் நுழைந்தாள். மனம் எதிலும் நிலையாக நிற்கவில்லை. சை! இந்த ஆண்களின் செயலை எப்படிப் புரிந்துகொள்வது? இதைவிட அவனிடம் வேறு எப்படி எடுத்துரைக்க முடியும்? எனக்கு ஒரு நல்லவழி காட்டம்மா என்று கூறி சம்பாதியை வணங்கினாள்.

மனதில் ஒரு பொறி தட்டியது. மணிமேகலா தெய்வம் மணிபல்லவத் தீவில் தனக்கு ஓதிய மாயவிஞ்சை மந்திரம் ஒன்று நினைவில் எழுந்தது.

கண்களை மூடிக்கொண்டாள். தான் வணங்கும் தெய்வத்தை மனதில்நிறுத்தி அந்த மாய மந்திரத்தை மனதிற்குள் ஓதினாள். என்ன விந்தை! மணிமேகலை தனது உருவத்தை இழந்து, காயசண்டிகையின் உருவத்தைப் பெற்றாள். அவ்வுருவத்துடன் கோவிலிலிருந்து வெளியில் வந்தாள்.

அங்கும் உதயகுமாரன் வந்துநின்றான். காயசண்டிகை உருவில் மணிமேகலை மாறினாலும் அவள் கையில் உள்ள திருவோட்டினைப் பார்த்து, சம்பாதி தெய்வத்தை வணங்கி, "மாய உருக்கொண்ட மணிமேகலை இங்குள்ள பெண்களில் எவருடைய உருவத்தை அடைந்தாள் என்று எனக்குத் தெரியவில்லை. சம்பாதி தெய்வமே! நீ மனம் உவந்து எனக்கு மணிமேகலையை அடையாளம் காட்டித்தந்தால் நான் காலம் பூராவும் உனக்குக் கட்டுப்பட்டவனாக இருப்பேன். உன் கோவிலுக்குத் தகுந்த கொடைகள் அளிப்பேன்" என்று வேண்டினான்.

"இன்னும் கேட்பாய், தேவர்களின் தலைவியாக விளங்கும் சம்பாதிப் பாவையே! பவளம்போன்ற இதழ்களில் ஒளிபொருந்திய வாளைப்போல் மின்னும் புன்னகையையும், மைதீட்டி எழுதப்படாத நீண்ட செங்கயல் விழிகளையும், வளைந்து ஈற்றுப் பகுதி நெறியுமாறு தோற்றம் உடைய வில்லினைப்போல வளைந்த புருவம் உடையவளும், தான் கற்ற கல்வியைத் தனக்குக் காவலாகக்கொண்டு, நல்ல அறிவுரைகளைக் கூறிவந்தவளுமான மணிமேகலை — வேடுவர்கள் துரத்தி வந்த யானையானது கோட்டதிற்குள் அகப்பட்டுக்கொண்டது போல உன்னுடைய கோவிலுக்குள் தஞ்சம் புகுந்துவிட்டாள். அவளை அடையாமல் இந்த இடத்தைவிட்டு அகல்வதாக இல்லை" என்ற உறுதியுடன் நின்றான்.

**பின்குறிப்பு: கணிகையரின் வாழ்க்கை முறை இந்தக் காதையில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.பாண்மகன் பட்டுழிப் படூஉம் பான்மைஇல் யாழ்இனம் போலும் இயல்பினம் அன்றியும் என்ற அருமையான உவமை மூலம் இதனை சீத்தலை சாத்தனார் விளக்குகிறார்.**

சத்திரியப்பிரியன்...

# வடக்கில் பாரிய கடல் பாசித் திட்டம்

## இந்தியாவின் ஒத்துழைப்புக்கு அமைச்சர் டக்ளஸ் நன்றி தெரிவிப்பு

**கரவெட்டிதினகரன் நிருபர்**

யாழ்ப்பாணம் மண்டைதீவுப் பகுதியில் அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் நவீன தொழில்நுட்பத்துடன் கடல்பாசி செய்கையை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று இந்திய தனியார் முதலீட்டாளர்களுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் நடைபெற்றது.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில், கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்னாயக்கா மற்றும் இராஜாங்க அமைச்சின் செயலாளர், நக்டா நிறுவனத்தின் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



இதன்போது கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"பொருளாதார சவால்களில் இருந்து மீள்வதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளுக்கு இந்தியா பல்வேறு ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றது.

இந்நிலையில், இலங்கையில் காணப்படுகின்ற வளங்களை இனங்கண்டு நவீன தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி விருத்தி செய்வதன் மூலம் நிலையான பொருளாதார நன்மைகளை உருவாக்குவதற்கு இந்திய தனியார் முதலீட்டாளர்கள் முன்வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

அந்தவகையில், மண்டைதீவு உட்பட வடக்கு மாகாணத்தில் பொருத்தமான இடங்களை அடையாளம் கண்டு கடல்பாசி செய்கையை மேற்கொள்வதற்கு தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் கடற்றொழில் அமைச்சு வழங்குமென்று தெரிவித்தார்.

## யாழ். மாநகர முதல்வருக்கு பிரான்சில் கௌரவிப்பு

**கோப்பாய் குறூப் நிருபர்**

பிரான்ஸ் நாட்டு வர்த்தகர்களால் யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் நேற்று முன்தினம் (28) பிரான்ஸில் கௌரவிக்கப்பட்டார்



பிரான்சில் 'குட்டி யாழ்ப்பாணம்' என அழைக்கப்படும் பரிஸ் லாச்சப்பல் பகுதியில் தமிழ் வர்த்தகர்களுக்கும் யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனுக்கும் இடையில் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் ஒன்று நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் தான் மணிவண்ணன் கௌரவிக்கப்பட்டார்.

தமிழ்மக்களின் நீண்டகால அரசியல் அபிலாஷைகள், மற்றும் தாயகத்து மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்திகள், மற்றும் மாநகர சபையின் செயற்பாடுகள், தொடர்பாக இந்நிகழ்வில் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பில் மாநகர முதல்வர் மணிவண்ணன் மற்றும் உறுப்பினர் பார்த்திபன் ஆகியோர் தமது கருத்துரைகளை வழங்கினர்.

இந்நிகழ்வினைத் தலைமை தாங்கி நடாத்திய பிரான்சின் பிரபல வர்த்தகர் பாஸ்கரன் பிரான்ஸ் இலங்கை தமிழ் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளரும் பிரான்ஸில் வளர்ந்து வரும் பிரபல வர்த்தகருமான தயா உட்பட பல வர்த்தகர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

யாழ்.மாநகரத்தில் அபிவிருத்தி செயற்திட்டமொன்றினை தாங்கள் அனைவரும் இணைந்து செயற்படுத்தி தருவாதாகவும் உறுதியளித்தனர்.

## ஊடகவியலாளர் சிவராமின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

ஊடகவியலாளர் சிவராமின் (தராகி) 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று காலை 10 மணியளவில் முல்லைத்தீவு ஊடக அமையத்தில் முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவர் சண்முகம் தவசீலன் தலைமையில் இடம்பெற்றது.

ஊடகவியலாளர் சிவராம் கடந்த 2005 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 28 ஆம் திகதி கடத்தப்பட்டு 29 ஆம் திகதி மறுநாள் பாராளுமன்றத்திற்கு அருகில் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலாக மீட்கப்பட்டிருந்தார் இக்கொடூர செயல் இடம்பெற்று இன்றுடன் 17 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

ஊடகவியலாளர் சிவராமின் (தராகி) நினைவுச் சுடர் ஏற்றப்பட்டதனை தொடர்ந்து சிவராமின்



திருவுருவப்படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி அகவணக்கம் செலுத்தி அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விடுதலை பயணத்தில் சிவராமின் ஊடகப் பங்களிப்பு எனும் தலைப்பில் மூத்த படைப்பாளர் நா.யோகேந்திரநாதனின் சிறப்புரையும் அதனைத் தொடர்ந்து இன்றைய பொருளாதார நெருக்கடியும் இதன் எதிர்கால போக்கும் என்னும் தலைப்பில் சமூக செயற்பாட்டாளர் விஜயகுமார் நவநீதனின் சிறப்புரையும் சமகாலத்தில் தமிழர்களின் கலை வடிவங்கள் எனும் தலைப்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் இளங்கீரனின் கருத்துரைகளை வழங்கினர்.

நிகழ்வில் ஊடகவியலாளர்கள் சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள் சட்டத்தரணிகள், சமூக ஆர்வலர்கள், இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## யாழ். நகர் பகுதியில் வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.மாநகரில் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற நான்கு சம்பவங்களில் இளைஞர்களை அச்சுறுத்தி பணம் மற்றும் அலைபேசிகளை அபகரித்த கும்பலைச் சேர்ந்த இருவர் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இளைஞர் ஒருவரிடம் 6 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் அலைபேசியை அபகரித்துச் சென்றமை தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட இருவர் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

அதேவேளை யாழ்ப்பாணம் மாநகரில் கடந்த ஒரு வாரத்துக்குள் மூன்று வெவ்வேறு சம்பவங்களில் இளைஞர்களை அச்சுறுத்தி பணம் மற்றும் அலைபேசிகள் அபகரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞனால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 22 மற்றும் 24 வயதுடைய இருவரைக் கைது செய்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 6 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் இரண்டு அலைபேசிகள் கைப்பற்றப்பட்டன.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் இருவரும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

## டிப்பர் மோதி மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேம்பிராய் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். குறுக்கு வீதி ஊடாக வந்த மோட்டார் சைக்கிள் புத்தூர் வீதி ஊடாக பயணித்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர். இதில் சாவகச்சேரி வடக்கு பகுதியைச் சேர்ந்த 29 வயதான இளைஞன் கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

## முள்ளிக்குளம் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இருபது வீடுகள் மக்கள் பாவனைக்கு கையளிப்பு

**மன்னார் குறூப் நிருபர்**

மறைந்த மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் அயராத முயற்சியின் காரணமாக மிசறியோ நிறுவனத்தினால் முள்ளிக்குளம் கிராமத்தில் புதிதாக 20 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.



முசலி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முள்ளிக்குளம் கிராமத்தில் அமைக்கப்பட்ட 20 வீடுகள் நேற்றைய தினம் வியாழக்கிழமை (28) மதியம் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மறைந்த மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் பல வருடங்களுக்கு முன் கண்ட கனவு இன்று நிறைவேறியுள்ளது.

முள்ளிக்குளம் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து சென்ற அனைத்து மக்களும் மீண்டும் தமது இடங்களுக்கு வர வேண்டும். அந்த மக்களை எப்படியாவது தமது சொந்த இடங்களுக்கு கொண்டு வர வேண்டும் என்று ஆயர் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

அதன்விளைவாகமிசறியோ நிறுவனத்தின் நிதியுதவியுடன் முள்ளிக்குளம் கிராமத்தில் 20 வீடுகள் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன.

இவ்வீடுகளை கட்டி முடிக்க உதவி செய்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகைக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.



யாழ். வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பாடசாலைப் புத்தகப்பை கல்வி கற்றல் உபகரணங்கள் அடங்கிய சுமார் 2,000 ரூபா பெறுமதியான பொருட்கள் 13 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. அதிக புள்ளிகள் பெற்றுக்கொண்ட மாணவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது. இதற்கான பரிசுப் பொருட்களை யாழ் மாநகரசபை உறுப்பினரும் பூமணியம்மா அறக்கட்டளை தலைவருமான லயன் கலாநிதி நா.தனேந்திரன் தனது மனைவியின் 65ஆவது பிறந்தநாள் நினைவாக வழங்கினார். **படம்: வேலணை குறூப் நிருபர்**










ஊடகவியலாளர் சிவராமின் (தராகி) 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று முல்லைத்தீவு, யாழ்ப்பாண, வவுனியா ஊடக அமையங்களில் அனுஷ்டிக்கப்பட்டது. படங்கள் யாழ், வவுனியா, மாங்குளம் குறூப், ஓமந்தை விசேட நிருபர்கள்




# உமா ஓயா திட்டத்தின் நிர்மாணப்பணிகள் விரைவில் நிறைவு





(ஹாலி எல விசேட நிருபர்)

நிலத்தடி மின்உற்பத்தி நிலையம் உட்பட உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 99 வீதமானவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உமா ஓயா திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் சுமேத எலகந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

பதுளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷன தெனிபிட்டிய மற்றும் குழுவினர் அண்மையில் உமா ஓயா நிலத்தடி மின் உற்பத்தி நிலையத்திற்கு விஜயம் செய்து அபிவிருத்தித் திட்டத்தின் செயற்பாடுகளை அறிந்து கொண்டனர்.

இரண்டு மாதங்களுக்குள் அனைத்துப் பணிகளும் நிறைவடைந்தமையால் இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் 120 மெகாவோட் மின்சாரத்தை ஆகஸ்ட் மாதத்திற்குள் தேசிய மின் தொகுப்பில் சேர்க்க முடியுமென உமா ஓயா திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் சுமேத எலகந்த மேலும் தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் அவர் தெரிவித்ததாவது, மின்சார நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வருவதற்கு தேவையான 12 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்று இந்த மின் நிலையத்திலிருந்து மின்சாரத்தை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பதுளை மாவட்ட செயலாளர் தமயந்தி பரணகம மற்றும் அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர் உயிரிழப்பு



ஹப்புத்தளையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது. ஹப்புத்தளை தங்கமலை பெருந்தோட்டத்தைச் சேர்ந்த 48 வயது நிரம்பிய ஒருவரே, இவ்வாறு உயிரிழந்துள்ளார். ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியிலிருந்தே இவரை 1990 சுகாதாரப் பிரிவினர் உயிரிழந்த நிலையில் மீட்டுள்ளனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு, களைப்படைந்து அமர்ந்தவரே, உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது. சடலம் ஹப்புத்தளை அரசினர் மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# தம்புள்ளையில் தனியார் அரச சேவைகளும் ஸ்தம்பிதம்

தம்புள்ள தினகரன் நிருபர்

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட வேலைநிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டநிலை காரணமாக தம்புள்ள, சீகிரிய, நாவுல மற்றும் கலேவெல ஆகிய பிரதேசங்களிலுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பணிகள் நேற்றும் நேற்றுமுன்தினமும் ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டன. தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்கு விவசாயிகளினால் ஓரளவு மரக்கறிகள் கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் அவற்றை கொள்வனவு செய்வதற்கு எவரும் வருகை தராமையால் காய்கறிகள் வியாபாரத்தின் நிமித்தம் ஒதுக்கப்பட்டிருந்தது. பொருளாதார மத்திய நிலையம் வெறிச்சோடி பாழடைந்த தோற்றத்தில் காணப்பட்டது. தம்புள்ள பொதுமக்கள் பஸ் சேவைகள் (இ.போ.ச) இடம்பெற்ற போதிலும் ஒருசில தனியார் பஸ் வண்டிகள் சில மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயணித்துக் கொண்டிருந்தமையை அவதானிக்கமுடிந்ததுடன் பயணிகளின் எண்ணிக்கை மிகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. தம்புள்ள டென்சில் கொப்பேகடுவ வைத்தியசாலையில் பிற்பகலில் வைத்தியசாலை தாதியர்கள் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்ததால் 90 வீதமான நோயாளர் வருகை தந்திருக்கவில்லை.

ஒருசில அரசாங்க நிறுவனங்கள் திறந்திருந்த போதிலும் அங்கு சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு வருகை தந்தோரின் எண்ணிக்கை மிகவும் குறைவாக காணப்பட்டது.

## சந்தன கட்டைகளுடன் இருவர் கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பெறுமதிமிக்க வெள்ளை சந்தனக் கட்டைகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் உடவளவ கொலம்பகெ ஆர பிரதேசத்தில் விசேட அதிரடிப் படை அதிகாரிகளால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இயந்திர உபகரணங்கள் பழுது பார்ப்பு நிலையமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போது அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலையடுத்து 787 கிலோ நிறையுடைய வெள்ளைச் சந்தன கட்டைகளுடன் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் 29 மற்றும் 47 வயதுகளை சேர்ந்தவர்கள் என தெரியவருகின்றது. இவற்றின் பணப் பெறுமதியை மதிப்பிடவும் சந்தேக நபர்களுடன் சந்தனக்கட்டைகள் உடவளவ வனப்பரிபாலன காரியாலய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகள் உடவளவ பொலிஸ் வன பரிபாலன பொலிஸ் விசேட அதிகாரி காரியாலயங்களின் கூட்டு முயற்சியில் நடைபெற்று வருகின்றன.

# மே தின நிகழ்வுகள் தோட்ட பிரதேச வாரியாக இடம்பெறும்

## சோ.ஸ்ரீதரன் தெரிவிப்பு



ஹற்றன் சுழற்சி நிருபர்

நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கத்தின் மே தின நிகழ்வுகள் இம்முறை தோட்டவாரியாகவும், பிரதேச வாரியாகவும் இடம்பெறும் – என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதி செயலாளரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன் தெரிவித்தார்.

ஹற்றனிலுள்ள கட்சி தலைமையகத்தில் நேற்று (29.04.2022) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மே தினம் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"மாபெரும் தொழிற்சங்கத் தலைவர் அமரர் வெள்ளையனால், 1965 மே முதலாம் திகதி தொழிலாளர் தேசிய சங்கம் நிறுவப்பட்டது. தொழிலாளர்களுக்கு உரிமைகளை பெற்றுக்கொடுக்கவும், தொழிலாளர்களின் நலன்புரி விடயங்களுக்காகவும் சங்கம் தீவிரமாக செயற்பட்டது. தற்போதும் அதே வழியில் செயற்படுகின்றது.

தற்போதைய தலைவர் பழனி திகாம்பரம் அமைச்சராக இருந்த காலகட்டத்தில், மலையகத்தில் தனி வீட்டு திட்டத்தை ஏற்படுத்தி, புதிய திருப்பத்தை ஏற்படுத்தினார்.

எமது 57 ஆவது மே தின நிகழ்வுகள் தோட்டவாரியாகவும், பிரதேச வாரியாகவும் இம்முறை நடைபெறும்.

அதேவேளை, மக்கள் அரசுக்கு எதிராக போராடிவருகின்றனர். ஆனால் மலையகத்தில் இடம்பெற்ற தன்னெழுச்சி போராட்டத்தை இ.தொ.கா. தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள முயற்சித்தது. மக்கள் அதற்கு எதிர்ப்பை வெளியிட்டனர்.

பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தே போராட்டம் என மக்கள் திசை திருப்பினர். இ.தொ.கா. அரசுக்கான ஆதரவை இன்னும் முழுமையாக விலக்கிக்கொள்ளவில்லை." என்றார்.



கருணை இல்லம் அமைப்பினூடாக அன்பளிப்பாக கிறேட்வெஸ்டன் பாடசாலைக்கு இரண்டு தொகை அச்சு தாள்கள் நேற்று (29) வழங்கப்பட்டன. கருணை இல்லம் அமைப்பின் தலைவர் முன்னுசாமி செல்வகுமார் நிதியில் இவ்வருடம் க.பொ.த சாதாரண தர பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு மாதிரி வினாத்தாள்களை பாடசாலையில் அச்சிட்டு வழங்குவதற்காக மாணவர்களின் நலன் கருதி இந்த வெள்ளைதாள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இதன்போது பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். பாரீஸ்,பிரதி அதிபர் விஜயசுந்தரம், கருணை இல்லத்தின் சார்பாக சுதர்சன் மற்றும் ஆசிரியர்கள் கலந்துக்கொண்டனர்.

# பிடகந்த தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்



மாத்தளை சுழற்சி நிருபர்

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுக்கு எதிர்ப்பு தெரிவித்து பிடகந்த தோட்டத் தொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பிடகந்த தோட்ட சந்தியிலிருந்து ஆரம்பமான பேரணி கந்தேநுவர சந்தி வரை ஊர்வலமாக சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் எம். சிவஞானம் இரத்தோட்டை பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் இ.தொ.க. பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# ஹாலிஎல – கந்தேகெதர வீதியில் மண்சரிவு; போக்குவரத்துக்கு இடையூறு

(ஹாலிஎல விஷேட, பதுளை தினகரன் விசேட நிருபர்கள் )



ஹாலிஎல கந்தேகெதர வீதியின் 3ஆம் தூணுக்கு அண்மித்த பகுதியில் மண்சரிவு அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளில் பெய்து வரும் அடை மழை காரணமாக போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

வீதியில் ஏற்பட்ட மண்சரிவு அனர்த்தம் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. வீதியை சீரமைக்கும் பணியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பதுளை மாவட்ட அலுவலகம், பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் ஹாலிஎல பிரதேச செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ பிரிவு அதிகாரிகள் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

கனமழை மற்றும் இடியுடன் கூடிய மழை பெய்து வருவதால் சாலையை சீரமைப்பது கடினமாகவுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



பிரதாப் சித்தானந்தன் குடும்பத்தின் நிதி அனுசரனையில் வன்னி ஹோப் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளையின் ஊடாக நானுஓயா சமர்செட் பாடசாலையில் சிறுவர் விளையாட்டு போட்டியொன்று நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பதக்கங்கள், வெற்றி கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் நுவரெலியா கல்வி வலய உதவி கல்வி பணிப்பாளர் வி. சாந்தகுமார், பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளையின் தலைவர் என்.முரளிதரன், வன்னி ஹோப் மற்றும் பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளையின் உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பலர் கலந்துக் கொண்டனர்.

படங்கள் தலவாக்கலை குறூப் நிருபர்

# தனமல்வில வீதியில் யானைகள் நடமாட்டம் அதிகரிப்பு

## வாகன சாரதிகளுக்கு எச்சரிக்கை

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

யானைகளால் பலாங்கொடை ஹம்பேகமுவ தனமல்வில வீதியில் பயணிக்கும் வாகனங்களுக்கும் பயணிகளுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

இதனால் இவ்வீதியில் பயணம் செய்வோர் அவதானத்துடன் கவனமாக பயணிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக பயணிகள், சாரதிகளுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வனப்பகுதிகளில் யானைகள் தரித்து நிற்கும் இடங்களில் யானைகள் வீதி மாறும் இடங்களில் பெருமளவு யானைகள் நடமாடி வருவதால் இப்பிரதேசம் மிகவும் அவதான பிரதேசமாக நிலவுவதாகவும் வனபரிபாலன திணைக்கண அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# சமனலவெவ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் உயர்வு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பலாங்கொடைப் பிரதேசத்தில் கடந்த சில வாரங்களாக இப்பிரதேசத்தில் பெய்து வரும் மழை காரணமாக சமனலவெவ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. தொடர் மழையால் நீர்த்தேக்கத்தின் நில மட்டம் வரை நீர் வற்றியிருந்த போதிலும் தற்போது இதன் நீர் மட்டம் திருப்தியான நிலைக்கு உயர்ந்துள்ளதாகவும் இதன் மூலம் நாட்டின் தேசிய மின்சார கட்டமைப்புக்கு வழமையாக வழங்கி வந்த மின்சாரத்தை மீண்டும் வழங்க முடியும் எனவும் பொறியியலாளர்கள் நேற்று உறுதிப்படுத்தினர்.

# கிழக்கின் குரல்



## தேசிய மின்கட்டமைப்புக்கு கிழக்கிலிருந்து 100 மெகா வோட்ஸ் சூரிய சக்தி இணைப்பு

### கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் ஒப்பந்தம் கைச்சாத்து

ரொட்டவெவ குறூப், முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்கள்



நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மின் உற்பத்தி நெருக்கடி முக்கியமான ஒரு விடயமாக காணப்படுகின்றது. கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட அலுவலகங்களில் சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்து தேசிய மின் சக்தியில் இணைத்துக் கொள்வதற்கான இரண்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன்தினம் (28) திருகோணமலையிலமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித பி வணிகசிங்க அதே போன்று kapital crop international pvt ltd,orb touch cc pvt ltd ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

தேசிய மின்சக்திக்கு 100 மெகா வோட் மின்சக்தியை இதன் மூலம் இணைத்து கொள்ளக்கூடியதாக இருக்கும். அத்துடன் 120 மில்லியன் அமெரிக்க டொலர் இதற்காக முதலீடு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் பெறப்படுகின்ற வருமானத்தில் 20 வீதமான வருமானத்தை கிழக்கு மாகாண சபைக்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாக அமையும். கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் உள்ள கிழக்கு மாகாண சபைக்குரிய நிறுவனங்கள் இது தொடர்பில் கருத்தில் கொள்ளப்பட்டு கட்டம் கட்டமாக இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக இதன்போது கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

### சிரேஷ்ட ஊடகவியலாளர்

## சிவராமின் 17ஆவது நினைவு தினம் அனுஷ்டிப்பு

வெல்லாவெளி, பெரியபோரதீவு தினகரன் நிருபர்கள்



மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் தர்மரெட்ணம் சிவராமின் (தராக்கி) 17ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று (29) காலை 9.30 மணியளவில் மட்டக்களப்பில் நினைவேந்தல் நிகழ்வும், கவனயீர்ப்பு போராட்டமும் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு. ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு நகரில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத்தூபியில் இரு நிமிட மௌன இறைவணக்கம் செலுத்தப்பட்டு, விளக்கேற்றி, மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டதுடன் அவரின் திருவுருவப்படத்திற்கு சிரேஷ்ட ஊடகவியலாளர்களினால் மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து ஊடகவியலாளர்களுக்கு நீதிவேண்டி கவனஈர்ப்பு போராட்டமும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரான், மட்டக்களப்பு மாவட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) இரா.சாணாக்கியன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இந்திரகுமார் பிரசன்னா, மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் ஏற்பாட்டில் சம்மாந்துறையில் நடைபெற்ற இப்தார் நிகழ்வு. (படம்: பாலமுனை தினகரன் நிருபர்)

## போதைப்பொருள் விற்பனையை தடுக்க கல்முனையில் விசேட ரோந்து நடவடிக்கை

மாளிகைக்காடு குறூப் நிருபர்

கல்முனை பிரதேசத்தில் மாணவர்களை இலக்கு வைத்து நடத்தப்படும் போதைப்பொருள் விற்பனையை முற்றாக இல்லாதொழிக்கும் வகையில் விசேட ரோந்து நடவடிக்கைகளில் சாய்ந்தமருது, கல்முனை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கேரளக் கஞ்சா,ஹெரோயின் மற்றும் மாவா போதைப்பொருட்களின் விற்பனை அதிகரித்துள்ளதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளதனை தொடர்ந்தே இந்த தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிராமங்களிலுள்ள பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், மத ஸ்தாபனங்கள், போன்றவற்றினூடாக பொதுமக்கள் மத்தியிலும் போதைப் பொருள் சம்பந்தமான விழிப்பூட்டும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொலிஸார் கடந்த மாதம் தொடக்கம் போதைப் பொருள் பாவனையை கல்முனை பிரதேசத்திலிருந்து முற்றாக ஒழிக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

பொலிஸார் சிவில் உடையிலும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.அத்துடன் பாடசாலைகளுக்கு அருகிலுள்ள கடைகள் மற்றும் நடமாடும் உணவு விற்பனை வியாபாரிகளும் பொலிஸாரினால் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

## இலவச சிங்கள மொழி பயிற்சி செயலமர்வு

மாளிகைக்காடு குறூப் நிருபர்

கிழக்கு இளைஞர் அமைப்பு மற்றும் கொலிஜ் ஒப் நொலேஜ் இணைந்து ஒழுங்கு செய்திருந்த இலவச சிங்கள மொழி பயிற்சி செயலமர்வில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வு முன்னாள் இளைஞர் பாரளுமன்ற உறுப்பினரும், கிழக்கு இளைஞர் அமைப்பின் தலைவருமான தணீஸ் ரஹ்மத்துல்லாஹ் தலைமையில் சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

## நல்லிணக்க மன்றங்களின் ஒன்றிணைந்த இப்தார்

கல்முனை மத்திய தினகரன் நிருபர்



சமாதானமும் சமூகப்பணியும் அமைப்பின் அனுசரணையில் இயங்கும் அம்பாறை மாவட்ட பிரதேச நல்லிணக்க மன்றங்கள் ஒன்றிணைந்து இஸ்லாமியர்களின் புனித நோன்பினை முன்னிட்டு சகல இனத்தவரையும் ஒன்றிணைத்து நோன்பு திறக்கும் (இப்தார் நிகழ்வு) கல்முனையில் உள்ள தனியார் மண்டபத்தில் (27) பிற்பகல் நடைபெற்றது. பௌத்தம், இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க ஆகிய பல்லின சமூகத்தினர் இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்ட நல்லிணக்க மன்ற மாவட்ட இணைப்பாளர் எஸ்.எல்.அஸீஸ் கல்முனை நல்லிணக்கமன்ற இணைப்பாளர் வீ.தங்கவேல் ஆகியோரின் இணைப்பில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சர்வ மதத் தலைவர்கள், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் லசந்த புத்திக, கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்சின் பக்கீர் சமாதனமும் சமூகப்பணி நிறுவனத்தின் தேசிய பணிப்பாளர் டி.தயாபரன் என பலரும் கலந்து கொண்டனர்.

## டொக்டர். முரளீஸ்வரனின் கவிதை நூல் வெளியீட்டு விழா

காரைதீவு குறூப் நிருபர்



மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில், வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரனின் "ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாள்கள்" கவிதை நூல் வெளியீடு இன்று காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு பிள்ளையாரடி தமிழ்ச்சங்க கட்டடத்தில் நடைபெறும்.

மட்டக்களப்பு தமிழ்ச் சங்க தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சித மூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு முன்னிலையாக கிழக்குப் பல்கலைக்கழக மேனாள் மொழித்துறைத்தலைவர் பேராசிரியர் செ. யோகராசா, முதன்மை அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் வைத்திய கலாநிதி. வே.விவேகானந்தராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூலாசிரியர் அறிமுக உரையை தேசபந்து மு.செல்வராசா நிகழ்த்த நூல் வெளியீட்டு உரையை தேசமான்ய விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா நிகழ்த்துவார். நயவுரையை அருட்தந்தை அ.அ.நவரெத்தினம் நிகழ்த்த வாழ்த்துரைகளை டொக்டர்களான புஷ்பலதா லோகநாதன், பா.யூடி ரமேஷ் ஜெயகுமார் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

இந்நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.கலாரஞ்சனி ஆகியோர் கலந்து கொள்வர்.


## புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல் வழங்கல்

தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்ட நலன் புரிச்சங்கமானது திருகோணமலை மாவட்டத்தின் பின்தங்கிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் ஐந்து மாணவரது புலமைப்பரிசில் தேர்வுப் பெறுபேறுகளை மேம்படுத்தும் நோக்கோடு தென்னன்மரவடி, திரியாய், கல்லம்பத்தை, குச்சவெளி, இரணைக்கேணி, நாவற்சோலை, கும்புறுபிட்டி ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் 5ஆம் வகுப்பு மாணவருக்கு "ஞானோதயம்" என்ற புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட நலன் புரிச்சங்க தலைவர் ச.குகதாசன் மேற்படி நூல்களை மாணவருக்கு வழங்கி வைத்தார்.

## சாய்ந்தமருது பிரதேசத்தில் வீட்டு கழிவு நீர் வீதிக்கு விடுவதால் சுகாதார சீர்கேடு



மாளிகைக்காடு குறூப் நிருபர்

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் வீட்டிலிருந்து கழிவாக அகற்றப்படும் அசுத்தமான நீரை பொது மக்கள் சிலர் பாதைகளில் திறந்து விடுவதால் நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதார சீர்கேடுக்கும் வழிவகுத்துள்ளது.

இவ் விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை அறிவித்தும் செவிடன் காதில் ஊதிய சங்கின் கதையாகவே முடிந்துள்ளது.

சிலர் வீட்டு கழிவு நீரை வீதிக்கு ஓரமாகவுள்ள வடிகானில் செலுத்தி வருகின்றனர்.பலர் நிதந்தரமாகவே வீட்டு கழிவு நீரை வெளியேற்றுவதற்கென வீட்டு சுவரில் குழாயை பொருத்தியும் உள்ளனர்.

இக்கழிவு நீரினால் தொற்றுநோய்கள் பரவும் ஆபத்தும் ஏற்படலாம் என்ற அச்சமும் தெரிவிக்கப்படுகிறது.

## தேசிய கல்வியற் கல்லூரி டிப்ளோமாதாரிகள் கிழக்கு பாடசாலைகளுக்கு நியமனம்

ஒலுவில் விசேட நிருபர்

தேசிய கல்வியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கான நியமனம் மே 02ம் திகதி திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளதாக, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ. எம்.டபிள்யூ.ஜீ. திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

2017/2019 கல்வி ஆண்டுகளில் தேசிய கல்வியியல் கல்லூரிகளில் இருந்து வெளியேறிய டிப்ளோமாதாரிகளுக்கு மே மாதம் 04ம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நியமனம் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமையினை கருத்திற் கொண்டு நியமனம் வழங்குதல் தொடர்பான விழாவை நடாத்துவதற்கான தீர்மானம் எடுக்கப்படாமையினால் நியமனதாரிகள் நேரடியாக கிழக்கு மாகாண கல்வியமைச்சுக்கு அழைக்கப்பட்டு நியமன கடிதங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மே மாதம் 02ம் திகதி திங்கட்கிழமை காலை 09.30 மணிக்கு உட்துறைமுக வீதி, திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு வருகை தந்து நியமனக் கடிதத்தினை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

ஆசிரியர் நியமனம் பெறுபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் வருகை தந்து நியமனக் கடிதத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

தவிர்க்க முடியாத காரணத்திற்காக சமுகம் தர முடியாதவர்களுக்கு மிகவும் நம்பிக்கைக்குரிய ஒருவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட கடிதத்துடன் அடையாளத்தை உறுதிப்படுத்தினால் மாத்திரமே நியமனக் கடிதத்தை பெற்றுக் கொள்ள முடியுமெனவும் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண பாடசாலைகளில் நியமனம் பெறவுள்ள டிப்ளோமாதாரிகள் தங்களது நியமனம் தொடர்பான தகவல்களை கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளமான www.ep.gov.lk/en/minieducationindex ஊடாக அறிந்து கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆயுர்வேத வைத்தியசாலைக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விஜயம்



கிண்ணியா தினகரன் நிருபர்

திருகோணமலை நாவற்சோலை பஞ்சகர்ம ஆயுர்வேத வைத்தியசாலைக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் உள்ளிட்ட குழுவினர் வியாழக்கிழமை (28) விஜயமொன்றினை மேற்கொண்டனர்.

இந்த விஜயத்தின்போது நாவற்சோலை வைத்தியசாலையை பார்வையிட்டதுடன் அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி சாமஸ்ரீ தேசகீர்த்தி (திருமதி) இ.ஸ்ரீதரிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது குறித்த வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியும், சுதேச மருத்துவ திணைக்கள திட்டமிடல் பிரிவின் வைத்திய அதிகாரியுமான வைத்தியர் எஸ்.சதீஸ் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

புதுப்புனல்
ஷம்ஸ் பாஹிம்




# அருள் பொங்கும் பெருநாள்

சுமையாகிப் போன
வாழ்வினில்
சுகம் தேடும் மனசுகள்
சுவையாகி மலர்கின்ற நாள்
பெருநாள்.
அருள் வேண்டி
தொழுததிலே_மன
இருள் நீக்கி
மானுட வாழ்வியலை
மலரச் செய்த நாள்
பெருநாள்.
துன்பங்கள் நிறைந்து
துயரங்கள் சேர்ந்தாலும்
இன்பங்கள் ஏந்தி
மறைவழியே மலர்ந்த நாள்
பெருநாள்.
உளத் தூய்மையினை
உயர்வாக மதித்து
நல்லவைகள் செய்தவர்க்கு
நானிலத்தில் மலரந்த நாள்
பெருநாள்.
மானுடத்தின் உயர்வுகளை
மறக்காமல் பேணி
இஸ்லாத்தின் கடமைகளை
ஏற்று நோன்பு நோற்றவர்க்கு
ஏற்றமிகும் பெருநாள்.
அடுத்தவர்க்கு உதவுதலே
அவனியிலே சிறந்ததென
எடுத்தோதும் தீன் நெறியை
எத்திவைக்க வந்த திருநாள்
ஏகன் விதித்த பெருநாள்.
ஏழை எளியவர்கள்
மகிழும் விதம்
அவரதம் தேவை
ஈதலிலே நிறைவேற்ற
வழிகாட்டும் நாள்
ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள்.

**பீ.ரீ.அஸீஸ்**
கிண்ணியா 07

# மாண்புமிகு நோன்பு



ரமழானின் முதல் பிறை–ரம்யமாய் வானில் தெரியும்
ஆயிரமாயிரம் கண்கள் அதைதேடிவானில் விழிக்கும்
பகலெல்லாம் பசித்திருந்து பசியின் பொறுமை உணர
இரவெல்லாம் விழித்திருந்து இறைவனை வணங்க

ஆயிரம் மாதகாலஅமலினைச் சுமந்துவந்து
பாரெல்லாம் பகிர்ந்தே செல்லும்
பாக்கியம் பெற்றது புனித ரமழான்

முறையோடு பசித்திருந்து முழு மனதாய் நோன்பிருந்து
தப்பான வழி மறந்து இறைவனிடம் பாவமன்னிப்பு
இரைஞ்சும் சிறப்பான மாதம் ரமழான்

இல்லங்களில் அருள் நிறைந்திடவும்
இல்லாதோரின் பசிஅறிந்திடவும்
தக்வாவில் நெஞ்சம் தழைத்தோங்கவும்
தௌபாவில் உள்ளம் திளைத்திருக்கவும்

தந்தானே இறைவன் புண்ணியரமழானை
ஐந்துவேளைத் தொழுதாலும்
நோன்புடன் தொழுவதே மகிமையே
இறைவனை அடையும் இவ்வழியே

மார்க்கம் சொன்ன முது
மொழியே

இரவு தொழுகை தராவீஹ்
சிறப்பாய் நடக்கும்
உறவுகள் யாவும்
செழிப்பில் செழிக்கும்
பள்ளிகள் நிறையும் பாவங்கள் குறையும்
சுஜுதுகள் ஆவல் கூடும்
தவ்பாக்கள் கேட்க நாடும்
குர்ஆனை ஓத கூடும் லைலதுல் கத்ர்

இரவைகண்கள் தேடும்
வருடம் ஒருமுறைவந்தாலும்
வாஞ்சையோடு கடைபிடிப்போம்
வருத்தம் எதுவும் எமக்கில்லை
வணங்கி தொழுவோம் அல்லாஹ்வை

நோன்பு நோற்றால் புண்ணியமாகும்
ரமழான் எம்மைபுணிதமாக்கும்
ஷவ்வால் முதல் பிறை கண்டதருணம்
கவலையோடு விடைபெற்று செல்லும்
புனித ரமழான்

ஷவ்வால் தலைபிறை வானமதை அழங்கரிக்க
தக்பீரின் முழக்கம் உள்ளமதை மகிழ்விக்க
சிறுவர்களின் கும்மாளங்கள் இன்பவெள்ளத்தில் குதுகலிக்க
முஸ்லிம்களின் ஆரவாரங்கள் கொண்டாட்டங்கள்
தரவந்த தோகையின் திருநாள்

**தேசகீர்த்தி** எம். நிசாம்தீன்.



# வல்லோனின் அருள்வீச்சு!!

சங்கைமிகு ரமழானே
குர்ஆனுடைய மாதமே
தொழுகையின் மாதமே
இதயமெங்கும் மகிழ்ச்சி!
சந்தனம் மணக்கும் மாதமே
சந்தோஷம் தரும் தியாகமே
சந்தேகம் நீக்கும் தியானமே
உலகமெங்கும் புகழ்ச்சி!
பாவங்கள் போக்கிவிடும் மாதமே
பாவக்கறைகள் நீக்கிடும் இதயமே
தானதர்மங்களை அள்ளிவழங்கி
உள்ளமெலாம் ஒரு புத்துணர்ச்சி!
ஈதல் புரிவோரை உயர்த்தி
பசிப்பிணியை உணர்த்தி
உணர்வுகளைக் கட்டுப்படுத்தி
உள்ளங்களைச் சுத்தப்படுத்திடு!
உண்மைகளை உலகுக்கு
ஊணமின்றி எடுத்தியம்பி
உயிர்களை வலம்வர
அருளாய் வந்துதித்தாய்!
மணங்கமழும் ரமழானே
மக்கள் உள்ளங்களில்
மடமையெனும் இருளகற்றி
தெளிவு எனும் ஒளியேற்றிடுவாய்!
ஏழைகள் துயரத்தை நீக்கி
கவலைகளைக் களைந்து
வல்லோனின் அருள்வீச்சில்
எமை வலம்வரச்செய்திடுவாய்!!

**கவியரசி எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா**
பஸ்யால



# விடுமுறை

விடுமுறைகளை தாங்கிவந்தாலும்
விடுமுறை எடுக்காமலேயே
கழிந்துவிடுகின்றன நாட்காட்டிகள்

நாட்காட்டிகளில் நின்று
நாட்களை எண்ணவைக்கும்
விடுமுறை நாட்கள்
வருகின்றபோதே மனசுக்கு

சிறகுகள் முளைத்துவிடுகிறது
நிழலின் அருமை வெய்யிலில்
தெரிவதுபோல்
விடுமுறையின் அருமையை
வேலை நாட்கள் உணர்த்துகின்றன

கடிகாரங்களில் அலாரத்திற்கு
விடுமுறை கொடுத்து
கைபேசி ஒலியடக்கி
போர்வைகளுக்கு விடுமுறை வழங்காமல்
உறக்கத்தை நீட்சிக்கும் இளைஞர்களின்
விடுமுறை நாட்களில்
தொலைக்காட்சித் தொடராய்
விரிந்து விடுகின்றன பகல் கனவுகள்

விடுமுறையில் ஓய்வெடுக்க எல்லோரும்
கிராமத்தில் ஒன்றுகூடும் வேளை
சற்றே இளைப்பாறுகிறது நகரம்


வெறிச்சோடிக்கிடந்த
கிராமங்களின் வறண்ட பாதைகளில்
வாகனங்களின் அணிவகுப்பு
ஊருக்கு வசந்தம் வந்துவிட்டதாய்
அடையாளப்படுத்துகின்றன
விடுமுறைநாட்கள்.
கைப்பேசிகளில் காதல்பேசி
களித்திருந்த காதலர்கள்
வாராந்த , மாதாந்த நேர்த்திக்கடனாய்
உதட்டு உண்டியல்களில்
முத்தக் காணிக்கைப் இட்டு
வைக்கும் ரகசிய வழிபாடுகளை
ஏற்றுக்கொள்கிறது காதல் தெய்வம்
விடுமுறை நாட்களில்

புத்தகங்களை மறந்துவிடும்
மாணாக்கர்களின் விடுமுறையில்
எப்போதும்போலவே வீட்டுப்பாடங்கள்
விடுமுறை எடுக்காமல் இருந்தாலும்
சலனமற்ற வீடுகள்
சந்தையாகி விடுகின்றன.

அப்பாக்களின் சந்தை நாளாகவும்
அம்மாக்களின் சமையல் நாளாகவும்
ஓய்வுகளை ஒழித்து விடுகின்ற
நாட்களாய் இல்லாத விடுமுறை நாட்கள்
எந்த நாட்காட்டியிலும் இல்லை.

வந்தவர்கள் திரும்பிப்போக
முடிகின்ற விடுமுறை நாட்கள்
தாத்தா பாட்டிகளுக்கு
ஏகாந்தம் கொடுத்துவிட மறுபடியும்
கிராமம் வசந்தத்திற்கு
விடுமுறையளித்து
வாடிவிடுகிறது வழக்கம் போலவே..

**மெய்யன் நடராஜ்**



# ஏழை

தினந்தோறும்
பசி போக்க
பல நூறு வீட்டிற்கு
அழையா விருந்தாளியாய்
அன்பான வார்த்தையில்
"அம்மா..... அம்மா....." என
அழைத்து சில்லறையாக
சிலதைச் சேர்க்கும்
மானிடர்கள் சமூக
சில்லறைதான்
அழுக்கான ஆடைதனை
அழுக்குப் போக்க
சோப்பு வாங்க பணமில்லை
என்பதால்
ஆடைதனில் அழுக்கை
சேமிக்கும் சேமிப்பாளன்
உடுத்தி கழித்த
ஆடைகளை புத்தாடையாய்
மனமுவந்து பெற்று
ஒட்டுப் போட்டு அணியும்
தயாளன்
உணவு சமைக்க முடியாமல்
குடும்பத்திற்காய்
சமைத்த உணவு
தினம் தேடும்
தாய்க்குருவிகள்
எஞ்சிய ஆறிய உணவு
பலவகையில்
அமிர்த ருசி தேடும்
அறுசுவையாளன்
நிம்மதியாய் தூங்க
கல்வீடும் மாடி வீடும்
கானல் நீராய்
கனாக்கானும்
நடைப்பிணமான ஜீவன்.
நிஜமான இல்லறமாய்
சுவரில்லா நிலவொளி ஏந்தும்
ஓட்டைக் குடிசையும்
பெருந்தெருவும் பாலமும்
பூங்காக்களும் கடைத்தெருவும்
பெரும் போக்குகளும்
பரிதாபமாய் நேசக் கரம்
நீட்டி வாகன இரைச்சல்
தாளாட்டி தூங்க வைக்கும்
ஜீவன்கள் ஏராளம்
சமூகத்தின் பார்வையில்
பதறாகியவனை உயிர்ப்பிக்க
சிந்திய சில்லறைகள் தேடாது
தாள்களை தேடுவோம்
மிஞ்சியதை விடுத்து
ஆவி பறக்க அன்னம் வழங்குவோம்
புத்தாடையை நனவாக்குவோம்
இல்லறத்தில் சொப்பனம் காண
சின்னதாய் சுவர்க்கம் அமைப்போம்
இந்த ஏழைக்காய்.

**முகம்மது முகைதீன் நௌபீக்**
தோப்பூர்
தோப்பூர் குறூப் நிருபர்

# இன்பத்தில் திளைத்தவள்

இலைகளின் அசைவில்
இசை உணர்ந்தேன்
கடலின் அலைகளில்
கால் நனைதேன்
இரவின் குளிரில் நிலவின் குரலில்
என்னையே மறந்தேன் ..

வானம் கறுத்து வருடி வந்த
தென்றலை கொஞ்சம் சேமிக்க
எண்ணினேன்
பெய்யும் அந்த அடைமழையில்
என் உள்ளம் ஏனோ ?
பேதமை அடைந்தது .

காற்றுவீசும் திசை உணர்ந்து
என் கவலைகள் எல்லாம் மறந்தேன் .
மாற்றமுறும் மானுடர்களை
எண்ணி மனமகிழ்ந்தேன் .
மண் வாசம் நுகர்ந்து
மனம் நிறைந்ததேன் .
தோற்றபோதும் கொஞ்சம்
அழுது விட்டு துடித்தெழுந்தேன்.
கண்சிமிட்டும் வண்ணத்திகளை
கையில் பிடிக்க நினைக்கையில்
அவைகளுக்காவது
சிறைவாசம் வேண்டாமே !!
என்றெண்ணி கண்களை
ஏக்கத்துடன் சிமிட்டிக்கொண்டேன் .

காயமுற்றுக் கிடந்த போதும்
வேதனையில் உளன்று போதும்
இந்த உலகமே ஒரு தற்காலிகத்தளம்
என் நிலைகள் மட்டும்
நிரந்தரமாக என்ன?
என மனம் தேற்றினேன்

சுற்றி எத்தனை இருந்தும்
அத்தனையும் மறந்து



என் ஞாபகங்களை மனக்கண்ணில்
மீட்டிக்கொண்டேன்
காலம் இறந்தாலும்
நினைவுகள் இறப்பதில்லை என்றெண்ண
மௌனமாய் சொல்கிறது என் மனம்
இத்தனையும் அடைந்த நான்
இன்பத்தில் திளைத்தவள் என்று ...

**நஸீபா நிழாமுதீன்**
மிகிந்தலை ....

# இலங்கை 19 வயதின் கீழ் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக முபாரக் நியமனம்

இலங்கை கிரிக்கெட்டின் உயர் செயற்திறன் மையத்தை மீள கட்டியெழுப்பும் முகமாக, இலங்கை 19 வயதின் கீழ் அணி, இலங்கை ஏ அணி மற்றும் இலங்கை வளர்ந்துவரும் அணிகளுக்கான புதிய பயிற்றுவிப்பு குழாம்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் இலங்கை வளர்ந்துவரும் அணியின் புதிய தலைமை பயிற்றுவிப்பாளராக முன்னாள் வீரர் ருவான் கல்பகே நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், இலங்கை 19 வயதின் கீழ் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுவந்த அவிஷ்க குணவர்தன இலங்கை ஏ அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவிஷ்க குணவர்தன ஏ அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை 19 வயதின் கீழ் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக முன்னாள் இலங்கை வீரர் ஜெஹான் முபாரக் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெஹான் முபாரக் கொழும்பு றோயல் கல்லூரி அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக கடந்த காலங்களில் செயற்பட்டுவந்த நிலையில், தற்போது 19 வயதின் கீழ் அணியை பயிற்றுவிக்கும் வாய்ப்பு கிட்டியுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பயிற்றுவிப்பாளர்களின் பதவிக்காலம் மார்ச் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ள என இலங்கை கிரிக்கெட் சபை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.



## இலங்கை 19 வயதின் கீழ் அணியின் பயிற்றுவிப்பு அணி

ஜெஹான் முபாரக் – தலைமை பயிற்றுவிப்பாளர்
சம்பத் பெரேரா – உதவி மற்றும் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர்
சமில கமகே – பந்துவீச்சு பயற்றுவிப்பாளர்
கயான் விஜேகோன் – களத்தடுப்பு பயிற்றுவிப்பாளர்
இலங்கை ஏ அணியின் பயற்றுவிப்பு அணி
அவிஷ்க குணவர்தன – தலைமை பயிற்றுவிப்பாளர்
திலிண கண்டம்பி – உதவி பயிற்றுவிப்பாளர்
மலிந்த வர்ணபுர – துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர்
சஜீவ வீரகோன் பந்துவீச்சு பயிற்றுவிப்பாளர்
உபுல் சந்தன – களத்தடுப்பு பயிற்றுவிப்பாளர்
இலங்கை வளர்ந்துவரும் அணியின் பயிற்றுவிப்பு அணி
ருவான் கல்பகே – தலைமை பயிற்றுவிப்பாளர்
ருவின் பீரிஸ் – உதவி பயிற்றுவிப்பாளர்
தர்ஷன கமகே – பந்துவீச்சு பயிற்றுவிப்பாளர்
தம்மிக சுதர்ஷன – துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர்

# கல்முனை அல் –மிஸ்பாஹ் மகா வித்தியாலய மாணவர்கள் தேசிய போட்டிக்கு தெரிவு

**(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)**

தேசிய இளைஞர் செஸ் சம்பியன் போட்டியில் கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 05 மாணவர்கள் தேசிய ரீதியில் நடக்கவிருக்கும் செஸ் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

அம்பாறை மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான

செஸ் சம்பியன் போட்டியில் பெண்களுக்கான 14

வயதுப்பிரிவில் அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவிகாளான எப்.எப்.இல்மா,எம்.ஏ.எப். இல்பா,ஏ.ஆர்.எப்.அனுபா ஆகியோர் 1ம், 2ம், 3ம் இடங்களில் வெற்றி பெற்று தேசிய ரீதியில் நடக்கவிருக்கும் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.




பெண்களுக்கான 10 வயதுப்பிரிவில் நடைபெற்ற போட்டியிலும் அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவிகாளான எஸ்.எப். அஜா அப்ரின், எம்.எப். ரிஸ்கா ஆகியோர் 1ம், 3ம் இடங்களில் வெற்றி பெற்று தேசிய ரீதியில் நடக்கவிருக்கும் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். இப்போட்டிக்காக மாணவர்களை பயிற்றுவித்து தயார்படுத்திய பாடசாலையின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களான எம்.ஜெ.முபீத்,ஏ.ஜே.எம். சாபித் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் மேற்குறித்த மாணவர்கள் அனைவரும் பாடசாலை அதிபர் எம்.ஐ. அப்துல் ரசாக் தலைமையில் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# ரோஜர் ஃபெடரர் செப்டம்பர் மாதம் மீண்டும் களத்தில்

ரோஜர் ஃபெடரர் லண்டனில் நடைபெறும் லாவர் கிண்ணத்துக்கு தயாராக, இலையுதிர்காலத்தில் போட்டியுடன் திரும்புவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன.



கடந்த ஆண்டு ஜூலை மாதம் விம்பிள்டனில் காலிறுதியில் ஹூபர்ட் ஹார்காக்ஸிடம் தோல்வியடைந்து, பின்னர் அவருக்கு மேலும் முழங்கால் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதிலிருந்து அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

20 முறை கிராண்ட்ஸ்லாம் சம்பியனான இவர் இந்த ஆண்டு விம்பிள்டன் சம்பியன்ஷிப் போட்டிகளில் விளையாட முடியுமா என்பதில் நிறைய சந்தேகங்கள் இருந்தன, ஆனால் இப்போது அவர் இந்த ஆண்டு எஸ்டபிள்யூ 19 இல் பங்கேற்க மாட்டார் என்பது உறுதியாகத் தெரிகிறது.

இந்த ஆண்டு அவர் 41 வயதை எட்டியிருந்தாலும், அனைத்தும் சரியாக நடந்தால், அவர் இன்னும் ஐரோப்பிய அணிக்கான லேவர் கோப்பையில் விளையாடப் போகிறார், அது செப்டம்பர் 23 முதல் தொடங்குகிறது.

அதன் பின்னர் அவர் தனது சொந்த போட்டியான சுவிஸ் இன்டோர்ஸில் விளையாட உள்ளார், போட்டியின் ஏற்பாட்டாளர்களின் கூற்றுப்படி, அந்த போட்டி அக்டோபர் 24 முதல் ஒரு மாதம் கழித்து தொடங்குகிறது.

பேசலில் பிறந்த வீரர் இந்த நிகழ்வில் 10 முறை வெற்றி பெற்றுள்ளார், கொவிட் 19 தொற்றுநோய் அதை இரத்து செய்ய கட்டாயப்படுத்துவதற்கு முன்பு கடைசியாக 2019 ஆம் ஆண்டில் போட்டி நடைபெற்றபோது மிக அண்மைய வெற்றியாக வந்தது.

தொற்றுநோய் காரணமாக இரண்டு வருட இடைவெளிக்குப் பிறகு, சுவிஸ் இன்டோர்ஸ் பாசல் 2022 இலையுதிர்காலத்தில் ஏடிபி போட்டிக்குத் திரும்பும் என்று சுவிஸ் உட்புற போட்டி அமைப்பாளர்கள் இன்ஸ்டாகிராமில் எழுதியுள்ளனர்.

பத்து முறை ஒற்றையர் சாம்பியனும், சொந்த ஊரின் வீரருமான ரோஜர் ஃபெடரர், செயின்ட் ஜாகோப்ஷாலில் உள்ள மைதானத்திற்கு தனது மறுபிரவேசத்தை அறிவித்துள்ளார். சுவிட்சர்லாந்தின் ஆல்டைம் கிரேட் தனது ஆரம்ப நிகழ்ச்சிநிரலில் லண்டனிலுள்ள லாவர் கோப்பையும், அதைத் தொடர்ந்து பாசலில் உள்ள சுவிஸ் இன்டோர்ஸ் அணியும் அடங்கும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.பின்னர் ஃபெடரர் ஒரு இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில் கூறினார்: வீட்டிற்குத் திரும்புவதை ஆவலுடன் எதிர்நோக்குகிறோம்.

# இங்கிலாந்து தொடருக்கான இலங்கை வளர்ந்துவரும் அணி அறிவிப்பு

இங்கிலாந்து வளர்ந்துவரும் அணிக்கு எதிராக அடுத்த மாதம் நடைபெறவுள்ள கிரிக்கெட் தொடருக்கான 18 பேர்கொண்ட இலங்கை வளர்ந்துவரும் குழாத்தின் விபரம் தொடர்பில் எமது இணையத்தளத்துக்கு அறியக்கிடைத்துள்ளது.



இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை வளர்ந்துவரும் அணி 3 நான்கு நாட்கள் கொண்ட போட்டி மற்றும் 3 ரி 20 போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்த போட்டித்தொடர் அடுத்த மாதம் 6ம் திகதிமுதல் 29ம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இலங்கை வளர்ந்துவரும் அணியின் தலைவராக கமிந்து மெண்டிஸ் நியமிக்கப்படவிருந்த போதும், தேசிய அணிக்கான அழைப்பின் காரணமாக, நிபுன் தனஞ்சய 4 நாட்கள் கொண்ட போட்டித்தொடருக்கான தலைவராகவும், தனன்ஜய லக்ஷான் ரி 20 போட்டிகளுக்கான தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய அணியில் விளையாடிய தனஞ்சய லக்ஷான் மற்றும் அஷேன் பண்டார ஆகியோர் இந்த குழாத்தில் இணைக்கப்பட்டுள்ளதுடன், பாடசாலை கிரிக்கெட் வீரர்களான சென்.ஜோசப்ஸ் கல்லூரியின் சகலதுறை வீரர் துனித் வெல்லாலகே மற்றும் புனித தோமையர் கல்லூரியின் வேகப்பந்துவீச்சாளர் யசிரு ரொட்ரிகோ ஆகியோர் குழாத்தில் இடம்பிடித்துள்ளனர்.

அணியில் இடம்பிடித்துள்ள அதிகமான வீரர்கள் நாட்டில் நடைபெற்ற தேசிய சுபர் லீக் மற்றும் மேஜர் கழக வளர்ந்துவரும் அணிகளுக்கு இடையிலான தொடர்களின் வெளிப்படுத்திய பிரகாசிப்புகளின் அடிப்படையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

துடுப்பாட்ட வரிசையை பொருத்த வரை அவிஷ்க பெரேரா, லசித் குருஸ்புள்ளே, நிஷான் மதுஷ்க, நுவனிந்து பெர்னாண்டோ மற்றும் அவிஷ்க தரிந்து ஆகியோர் இங்கிலாந்து ஆடுகளங்களில் விளையாடுவதற்கான வாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ளனர். இவர்களுடன் நிபுன் தனஞ்சய மற்றும் அஷைன் பண்டார ஆகியோரும் துடுப்பாட்டத்தை பலப்படுத்தவுள்ளனர். சகலதுறை வீரர்களான துனித் வெல்லாலகே, சந்துஷ் குணதிலக்க, தனன்ஜய லக்ஷான் மற்றும் மானெல்கர் டி சில்வா ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளதுடன், சுழல் பந்துவீச்சினை டிலும் சுதீர மற்றும் அஷைன் டேனியல் பலப்படுத்தவுள்ளனர்.

வேகப்பந்துவீச்சை பொருத்தவரை நிபுன் மாலிங்க, நிபுன் ரன்சிக, உதித் மதுஷான், யசிரு ரொட்ரிகோ மற்றும் அம்ஷி டி சில்வா ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள இந்த அணியானது புதிதாக பதவியேற்றுள்ள ருவான் கல்பகேவின் பயிற்றுவின் கீழ் விளையாடவுள்ளது. அணியின் உதவி பயிற்றுவிப்பாளராக மலிந்த வர்ணபுர செயற்படவுள்ளதுடன், வேகப்பந்துவீச்சு பயிற்றுவிப்பாளராக சமில கமகேவும், அணியின் முகாமையாளராக வினோதன் ஜோன் ஆகியோரும் செயற்படவுள்ளனர்.

**இங்கிலாந்து தொடருக்கான இலங்கை வளர்ந்துவரும் அணி**

நிபுன் தனன்ஜய (நான்கு நாள் போட்டித்தொடருக்கான தலைவர்), தனன்ஜய லக்ஷான் (ரி 20 தலைவர்), லசித் குரூஸ்புள்ளே, அவிஷ்க பெரேரா, சந்துஷ் குணதிலக்க, அவிஷ்க தரிந்து, நுவனிந்து பெர்னாண்டோ, நிஷான் மதுஷ்க, அஷேன் பண்டார, துனித் வெல்லாலகே, டிலும் சுதீர, அஷைன் டேனியல், நிபுன் மாலிங்க, நிபுன் ரன்சிக, மானெல்கர் டி சில்வா, யசிரு ரொட்ரிகோ, உதித் மதுஷான், அம்ஷி டி சில்வா

## போட்டி அட்டவணை

| திகதி | போட்டி | மைதானம் |
|---|---|---|
| மே 6 முதல் 9 | முதல் 4 நாள் போட்டி | கெண்டபெரி– கெண்ட் |
| மே 13 முதல் 16 | 2வது நான்கு நாள் போட்டி | ஏஜஸ் போவ்ல் – ஹெம்ஷையர் |
| மே 20 முதல் 23 | 3வது நான்கு நாள் போட்டி | கில்பர்ட் சிசி – சர்ரே |
| மே 25 முதல் ரி 20 | கியா ஓவல் | – சர்ரே |
| மே 27 2வது ரி 20 | தி கூபர் ஏசிஜி | – சமரெஸ்ட் |
| மே 29 3வது ரி 20 | பிரிஸ்டோல் கௌண்டி மைதானம் | – குளோசெஸ்டர்ஷைர் |

# இலங்கைக்கு புதிய பந்து தடுப்பு பயிற்சியாளர் அன்டன் ரூக்ஸ்

இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய பந்து தடுப்பு பயிற்றுவிப்பாளராக அன்டன் ரூக்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.இவர் நெதர்லாந்து அணியின் பிரதான பயிற்றுவிப்பாளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.மார்ச் 7 முதல் தேசிய அணியில் பயிற்சியாளராக ரூக்ஸ் பொறுப்பேற்பார்.

தென்னாபிரிக்காவில் முதல் தர துடுப்பாட்ட வீரராக விளையாடிய ரூக்ஸ், மற்ற அனைத்து தேசிய அணிகளுக்கும் உயர் செயல்திறன் மையத்திலும் பயிற்சியளிப்பதுடன் இலங்கை அணியின் பொறுப்பாளராகவும் இருப்பார்.இலங்கை கிரிக்கெட்டில் இணைவதற்கு முன், ரூக்ஸ் இங்கிலாந்து ஸ்டேட் கிரிக்கெட் போட்டியை பிரதிநிதித்துவப் படுத்தும் நாட்டிங்ஹாம்ஷயர் பயிற்சியாளராக இருந்தார். அமெரிக்காவின் நியூயோர்க்கில் பிறந்த ரூக்ஸ்க்கு 40 வயது.



# வடக்கு, கிழக்கு மாகாண கராத்தே சுற்றுப்போட்டி –2022



**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மண்டபத்தில் அண்மையில் கராத்தே போட்டிகள் நடைபெற்றது. இதில் சுமார் 400 போட்டியாளர்கள் ங்குபற்றினார்கள். திருகோணமலை டிஜோ Trinco Dojo சார்பாக 32 போட்டியாளர்கள் பங்குபற்றினர். இதில்,

**காட்டா ஆண்கள்**
தங்கம் 03
வெள்ளி 03
வெண்கலம் 07 பதக்கங்களையும்,
குமித்தே ஆண்கள்
தங்கம் 02
வெள்ளி 03
வெண்கலம் 03 பதக்கங்களையும்
**காட்டா பெண்கள்**
தங்கம் 03
வெள்ளி 02
வெண்கலம் 02 பதக்கங்களையும்
குமித்தே பெண்கள்
தங்கம் 04
வெள்ளி 01
வெண்கலம் 02

பதக்கங்களை வென்று திருகோணமலை மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். திருகோணமலை மாவட்ட வீர, வீராங்கனைகள் 12 தஙகப்பதக்கங்களையும் 09 வெள்ளிப்பதக்கங்களையும் 14 வெண்கலப்பதக்கங்களையும் பெற்றுள்ளார்கள்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 30ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.